வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P.1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 25.07.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 206 பக்கங்கள் : 12






மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.


# புதிய கல்வி சீர்திருத்தத்துக்கு அனைவரும் ஒத்துழையுங்கள்

## பாராளுமன்றில் ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, ஜூலை 25

**உத்தேச கல்வி சீர்திருத்தம் வெறும் பாடத்திட்டத்தை திருத்துவதற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. நாட்டின் முழு சமூக மட்டத்தையும் பொருளாதார மட்டத்தையும் ஒரேயடியாக உயர்த்தும். இது ஓர் அரசியல் நோக்கிலான திட்டம் அல்ல - ஒரு சமூக நோக்கம் கொண்டது என்பதால் இதற்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.**


நேற்றைய தினம் அவர் பாராளுமன்றில் கல்வி சீர்திருத்தம் தொடர்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். நீண்ட அந்த உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

நாட்டின் கல்வி முறை ஊடாக உருவாக்கப்பட்டுள்ள இளம் தலைமுறை - இந்தக் கல்வி முறை உருவாக்கிய பொருளாதாரம் குறித்து நம்மில் யாரும் திருப்தி அடைய முடியாது. எனவே, எங்களுக்கு மிகவும் விரிவான கல்வி சீர்திருத்தம் அவசியம்.

தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் தொழிலாளர்களில் 3 வீதத்தினரே பயிற்றப்பட்டவர்கள். ஏனைய 97 வீதத்தினர் பயிற்றப்படாத - பாதியளவு பயிற்றப்பட்டவர்களாவர். எனவே, பொருளாதார ரீதியாக, உலகில் ஒரு முன்னேற்றகரமான தொழிலாளர் சந்தையை நாம் அடைய வேண்டும். அதற்காக சிறந்த, உலகில் அந்த சமயத்தில் வெளிப்படும் அறிவைப் பெற்ற - பகிர்ந்து கொள்ளும் கல்வி முறை நமக்குத் தேவை.

நமது கல்வியறிவின்மையும் வறுமையும் ஒன்றாகச் செல்கின்றன. நீங்கள் கல்வியறிவற்றவராக இருந்தால், நீங்கள் குறிப்பிட்டளவு ஏழையாக இருப்பீர்கள். எனவே, இந்த வறுமையிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள

11



அரியாலை புதைகுழி:

## 3 மனித எலும்புக்கூடுகள் நேற்றும் அடையாளம்!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 25

அரியாலை மனிதப் புதைகுழியில் தொடரும் அகழ்வில் நேற்றைய தினமும் 3 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அத்துடன், போத்தல் ஒன்றும் இரும்பு உருளைகள் என்று அடையாளப் படுத்தப்படும் சில பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியில் அகழ்வாய்வு தளம் 1, அகழ்வாய்வு தளம் 2 என்று அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் அகழ்வு

11

## புலிகள் மீளுருவாக்க முயற்சி; கைதான 16 பேர் விடுதலை!


கொழும்பு, ஜூலை 25

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்ய முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதான 16 தமிழ் இளைஞர்களை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

2017 தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கம்

11



## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நல்லூரில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் கறுப்பு ஜூலை கலவரத்தின்போது சிறைகளில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீதி கோரியும் கவனவீர்ப்பு செயல்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

நல்லூர் கிட்டு (சங்கிலியன்) பூங்காவில் விடுதலை என்ற கருப்பொருளில் இந்த கவனவீர்ப்பில், சங்கிலியன் அரண்மனை நுழைவாயில் முன்பாக ஆரம்பமான பேரணி கிட்டு பூங்காவை அடைந்தது. தொடர்ந்து விடுதலை விருட்சத்துக்கு ஒரு குவளை தண்ணீர் சேகரிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழ் அரசியல் கைதியாக இருந்து விடுதலை பெற்றிருந்த

11

## கறுப்பு ஜூலை சம்பவங்களை வெள்ளையடித்து மறைக்க சதி

அரசாங்கத்தை சாடுகிறார் அர்ச்சுனா

கொழும்பு, ஜூலை 25

நாட்டில் 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற கறுப்பு ஜூலை வன்முறை சம்பவங்களை அரசாங்கம் வெள்ளையடிப்பு செய்து மறைக்க முயல்கிறது என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11

## தாயும் பிள்ளைகள் இருவரும் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

முல்லைத்தீவில் சோகம்

- ஜெ. டிஷாந்த் -

முல்லைதீவு, ஜூலை 25

முல்லைத்தீவில் தாய், பிள்ளைகள் இருவரின் சடலங்கள் கிணற்றிலிருந்து நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டன.

முல்லைத்தீவு - பனிக்கன்குளம் அரச ஊழியர் வீட்டு திட்டத்திலுள்ள பயனாளி ஒருவரின் கிணற்றில் இருந்தே சடலங்கள் மீட்கப்பட்டன.

11

## தாவடி படுகொலை; சந்தேகநபர் கைது!

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஜூலை 25

தாவடியில் நேற்று முன்தினம் இரவு ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறை வீதியில் தாவடி மதுபான விற்பனை நிலையம் அருகே தர்க்கம் ஒன்றில் இருவர் ஈடு பட்டனர். இதன்போது, மதுபோதையில் இருந்தவர் மற்றவரை பலமுறை கத்தியால்

11

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து: 100 கோடி டொலர் இழப்பீடு வழங்க நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜூலை 25

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தின் மூலம் நாட்டின் கடல் சூழ லுக்கு ஏற்படுத்திய அழிவு, பொருளாதார இழப்புக்காக 100 கோடி டொலரை (நம் நாட்டு மதிப்பில் சுமார் 30 ஆயிரம் கோடி ரூபாய்) இழப்பீடாக வழங்குமாறு கப்பல் நிறுவனத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீண்டநாட்களாக தொடர்ந்த வழக்கு விசாரணைகளின் பின்னர் உயர் நீதிமன்றம் நேற்றைய தினம் 361 பக்கங்கள் கொண்ட தீர்ப்பை வழங்கியது. சுற்றுச்சூழல் தொடர்பான வழக்குகளில் இந்தத்

11

## நானும் இறந்தால் பிள்ளைகள் அநாதைகளாகி விடுவார்கள்!


அரசியல் கைதியின் தாய் கண்ணீர்

யாழ்ப்பாணம், ஜூலை 25

"நானும் இறந்தால் எனது மகனின் இரு பிள்ளைகளும் அநாதைகளாகி விடும். அரசியல் கைதியாக உள்ள அவரை விடுதலை செய்ய வேண்டும்", இவ்வாறு உருக்கமாக கோரிக்கை முன்வைத்துள்ளார் தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் தாயார்.

நேற்றைய தினம் கிட்டு பூங்காவில் நடந்த விடுதலை கவனவீர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11



சைவ மக்களால் கடைப்பிடிக்கப்படும் இறந்த தமது தந்தை மற்றும் முன்னோருக்கு பிதிர் கடன் செலுத்தும் ஆடி அமாவாசை விரத தினமான நேற்று கீரிமலையில் பிதிர்க்கடன் செலுத்தும் மக்கள்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் கறுப்பு ஜூலை சிறை படுகொலைக்கு நீதி கோரியும் நல்லூர் கிட்டு பூங்காவில் நேற்று நடைபெற்ற போராட்டத் தின்போது...!

# கெருடமடு பிள்ளையார் ஆலய தீர்த்த திருவிழா சிறப்புற நடந்தது

முல்லைத்தீவு, ஜூலை 25

புதுக்குடியிருப்பு - மன்னாகண்டல் - கெருடமடு பிள்ளையார் ஆலயத்தில் ஆடி அமாவாசை தினமான நேற்று தீர்த்தத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

நேற்று முன்தினம் விநாயக பெருமானுக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று பூசைகளின் பின்னர், சுவாமி உள்வீதி வலம் வந்தார். மாலை, வரலாற்று பிரசித்தி பெற்ற ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய பூலோக நாயகி சமேத வேகாவனேஸ்வர பெருமான் எழுந்தருளி கெருடமடு பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்தார்.



இதைத் தொடர்ந்து இரவு பூசைகள் நடைபெற்றன. தொடர்ந்து சுவாமிகள் உள் வீதி, வெளிவீதி வலம்வந்தனர். இதன் பின்னர் வலந்து நேர்ந்து பொங்கல் நடைபெற்றது. நேற்று காலை பிதிர்கடன்கள் செலுத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து சுவாமிகள் தீர்த்தமாடினர்.

பெருமளவான பக்தர்கள் தூக்குக் காவடி , தீக்காவடி , பால் செம்பு காவடிகள் என நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். இந்தத் திருவிழாவில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றனர். (ஐ)

# புத்தக அரங்க விழாவின் 3ஆம் நாள் நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 25

தேசிய கலை இலக்கிய பேரவையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் 26ஆவது நிகழ்வு இன்று வெளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை அளவெட்டி அருணோதய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மூன்றாவது நாளான ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் 'ஈழத்து நூல்களை அறிவோம்' என்ற தொனிப்பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் எழுத்தாளர் வள்ளியம்மை சுப்பிரமணியம் நினைவு அரங்கில் அருணோதய கல்லூரி அதிபர் த.தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது, நூல்களின் அறிமுக உரைகளை ஆதவன் சரவணபவனின் 'குல்லமடை' நூல் பற்றி எழுத்தாளர் வடகோவை வரதராஜன், வி. கே. றொபினின் 'அவளின் மொழி' நூல் தொடர்பாக மாதவி உமாசுத சர்மா, வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் 'மனோன் மணீயம்' புத்தகம் பற்றி விமலன் வைஷ்ணவன் ஆகியோர் ஆற்றுவர். மாணவர்களான சுதர்சன் தர்சனா, ஆனந்தராசா சானுஜா நிகழ்ச்சியை தொகுத்து வழங்குவர்.

விசேட கலை நிகழ்வுகளாக சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் மாவை. நித்தியானந்தனின் எழுத்துருவில் பு. கணேசராசாவின் நெறியாள்கையில் 'முட்டை' மற்றும் பு. கணேசராசாவின் எழுத்துரு, நெறியாள்கையில் 'ஆட்டுக் குட்டி?' ஆகிய நாடகங்கள் அரங்கேறவுள்ளன. அத்துடன், புத்தக கண்காட்சியும் மலிவு விற்பனையும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 25

சரவணை தேவபுரம் அருள் மிகு கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவில் பெருந்திருவிழா நடைபெறவுள்ளது. இந்தப் பெருந்திருவிழாவில் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் ஓகஸ்ட் 8ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரை தினமும் மாலை 6.30 மணிக்குச் சிவநெறிப்பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

சைவப்புலவர்கள் கந்த. சத்தியதாசன், செ. த. குமரன், க. கைலநாதன், இளம்சைவப்புலவர்கள் ச. நவநீதன், க. கயிலைவாசன், நித்திய பாபுதரன் ஆகியோர் சொற்பொழிவை ஆற்றவுள்ளனர். (ஐ)

# கத்திமுனையில் மிரட்டி தங்கச்சங்கிலி கொள்ளை

மன்னார், ஜூலை 25

ஓய்வுபெற்ற ஆசிரியை வீட்டுக்குள் புகுந்து கத்திமுனையில் மிரட்டி தங்கச்சங்கிலி கொள்ளையிடப்பட்டுள்ளது.

மன்னார் - நானாட்டான் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஆசிரியை வீட்டில் தனியாக இருந்தபோது வீட்டின் பின்புற வேலியால் வீட்டுக்குள் புகுந்த முகமூடி அணிந்த நபர் அவரை கத்தி முனையில் மிரட்டி அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை கொள்ளையிட்டு சென்றான்.

சுமார் 7 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இரண்டரை பவுண் தங்கச் சங்கிலியே இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தாவடியில் கத்தி குத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

இனந்தெரியாத நபர்களின் கத்திக்குத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சுதுமலை மத்தி, மானிப்பாயைச் சேர்ந்த நே. சர்வேந்திரன் (வயது 45) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

காங்கேசன்துறை வீதியில் தாவடி பகுதியில் மதுபான விற்பனை நிலையம் அருகே நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை யாவன,

மதுபோதையில் இருந்தவர்களுடன் ஏற்பட்ட தர்க்கமே கத்தி குத்தில் முடிந்தது.

இதையடுத்து, சந்தேகநபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர். வயிறு, கையில் பலத்த காயமடைந்த நபர் மயக்கமடைந்த நிலையில் காணப்பட டார்.

சம்பவம் தொடர்பில் அறிந்து அங்கு வந்த விசேட அதிரடி படையினர் காயமடைந்தவரை மீட்டு, யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சந்தேகநபர்கள் அடையாளம் காணப்படாத நிலையில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03-05)

# மடு அன்னையின் ஆவணி திருவிழா; முன்னாயத்தம் குறித்து கலந்துரையாடல்!

மன்னார், ஜூலை 25

மன்னார் மடு திருத்தல ஆவணி மாத திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா எதிர் வரும் ஓகஸ்ட் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15ஆம் திகதி நிறைவடையும்.

இந்தத் திருவிழாவில் நாடு முழுவதுமிருந்து இலட்சக் கணக்கானவர்கள் திரள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, இது தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் மன்னார் மாவட்ட செயலாளர் க. கனகேஸ்வரன் தலைமையில், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நேசன் அடிகளார், மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளாரின் பங்கேற்பில் நடத்தப்பட்டது.

திருவிழா காலத்தில் பங்கேற்கும் பக்தர்களுக்கு தேவையான வசதிகள் தொடர்பில் உரிய திணைக்கள தலைவர்களின் ஆலோசனைகளும் பெறப்பட்டது. அத்துடன், சுகாதாரம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள், நீர் விநியோகம், உணவு விநியோகம் உள்ளிட்டவை குறித்து ஆராயப்பட்டது.

மேலும், சட்டம் ஒழுங்கை பின்பற்றும் வகையில் முப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது. (ஐ)

# நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25

மக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்படும் தற்காலிக வியாபார நிலையங்களை அகற்றும் செயல் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்புறத்தில் நடைபாதை கடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் மயூரன் தெரிவித்துள்ளார்.

இதன்படி, அந்தப் பகுதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுகின்றவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் அவற்றை அகற்ற வேண்டும். இதனை மீறி செயல்படுவோரின் வியாபார நிலைய பொருட்கள் சபையால் கையகப்படுத்தப்படும்.

மேலும் நடைபாதையில் பயணிப்போருக்கு இடையூறாக இருக்கும் சகல விடயங்களும் அகற்றப்பட வேண்டும். வாகனங்கள் நிறுத்தப்படுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. மீறுவோர் மீது சட்ட நட வடிக்கை எடுக்கப்படும் - என்றும் தவிசாளர் எச்சரித்துள்ளார். (ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.07.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## விசாரணைகளுக்கான கோரிக்கை

வெலிக்கடை படுகொலைகள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்திருக்கிறார். 1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற படுகொலைகளின் தொடர்ச்சியாக வெலிக்கடையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 53 தமிழ் கைதிகள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தக் கொலைகளை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிங்களக் கைதிகளே மேற்கொண்டிருந்தனர். இதற்கான உதவியை அப்போதிருந்த சிறை அதிகாரிகள் வழங்கினரென்றே குற்றஞ்சாட்டப்பட்டது. இதன்போது, தமிழீழ விடுதலை இயக்கத்தின் மூத்த தலைவர்களான குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரும் கொல்லப்பட்டனர். இதற்கான விசாரணையே தற்போது செல்வம் கோரியிருக்கிறார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியே அப்போது ஆட்சியிலிருந்தது. கறுப்பு ஜூலை படுகொலைகளும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இன ரீதியான பதற்றங்களுமே இலங்கையின் அரசியல் வரலாற்றையும் மாற்றியது. கறுப்பு ஜூலை படுகொலைகளைத் தொடர்ந்து அமிர்தலிங்கம் உடனடியாக இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அப்போது, இதற்கான விசாரணைகளை எவரும் கோரவில்லை. மாறாக, இதற்கான நீதி என்பது தமிழ் மக்களுக்கான ஒரு சுயாதீன அரசு என்பதாகவே அன்றைய அரசியல் சிந்தனையாக இதுந்தது. பின்னர் இயக்க மோதலின்போது வெலிக்கடையில் ரெலோ இழந்த உறுப்பினர்களை விடவும் - பெரும் எண்ணிக்கையானவர்கள் சகோதர யுத்தத்தில் கொல்லப்பட்டனர். இறுதியில் அதன் தலைவரான சிறீசபாரத்தினமும் கொல்லப்பட்டார்.

இப்போது வெலிக்கடை படுகொலைகளுக்கு தேசிய மக்கள் சக்தியால் என்ன நீதியைத் தந்துவிட முடியும்? நல்லாட்சி காலத்தில் செல்வம் அடைக்கலநாதன் ரணில் - மைத்திரி ஆட்சியில் குழுக்களின் பிரதித் தலைவராக இருந்தார். அப்போது இவ்வாறான விசாரணைக் கோரிக்கைகள் எதனையும் அவர் முன்வைக்கவில்லை. மாறாக, சம்பந்தனின் வேலைத்திட்டத்துக்கு விசுவாசமான ஒருவராகவே இருந்தார்.

செம்மணியில் என்ன நடந்தது? யாரால் இடம்பெற்றது? - பதில் இல்லை. ஆனால், ஆதாரங்கள் கண் முன்னே இருக்கின்றன. அதற்கான ஒரு சுயாதீன விசாரணை நடந்து, அதில் குற்றவாளிகள் என்று எவரேனும் அடையாளம் காணப்பட்டால் - அதுவே ஒரு வரலாற்று சாதனையாக இருக்கும்.

இன்றுள்ள உலக அரசியல் சூழலில் இவ்வாறான விசாரணைகளில் நீதி நிலைநாட்டப்படும் என்பதற்கான உத்தரவாதங்கள் மிகவும் குறைவு - இல்லை என்று கூறுவதே சரியானது. இன்றைய உலகில் பலமுள்ளவர் எதனையும் செய்யலாம் என்னும் நிலைமை உருவாகிவிட்டது.

யூதர்கள் நாசி ஜேர்மனியில் மிலேச்சத்தனமாக கொலப்பட்டனர். அதற்கான நீதியை அவர்கள் எவரிடமும் எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், அவர்களுக்குத் தெரிந்திருந்தது தங்களுக்கான நீதியை எவரும் தரமுடியாது - தரவும் மாட்டார்கள் - அதற்கு பதிலாக தாங்களே மீண்டெழ வேண்டும். தங்களுக்கான நீதியை தாங்களே நிலைநாட்ட வேண்டும். இன்றைய இஸ்ரேல் என்பது யூதர்களின் படுகொலைகளிலிருந்து எழுந்த தேசம்தான். அதனால்தானோ என்னவோ இஸ்ரேல் தன்னைச் சூழவுள்ளவர்கள்மீது எப்போதும் மோதும் மனோபாவத்தோடு இருக்கிறது. எனவே, தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் இருப்புத்தான் அனைத்து இழப்புகளுக்குமான நீதியாகும். தங்களுக்குள் பிளவுபடுவதை விடுத்து - நாங்கள் அனைவரும் ஒன்று - ஒன்றாக நிற்பதன் மூலம் எங்களுக்கான நீதியை எங்களின் அரசியலால் நிலைநாட்டுவோம் என்னும் உறுதி மொழியும் அதற்கான செயலும்தான் இன்றைய தேவை.

## வாள்வெட்டில் ஒருவர் காயம்!

யாழ்ப்பாணம்,ஜூலை 25
ஊரெழு பகுதியில் வாள் வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஊரெழு, பேபிபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அரியாலையை சேர்ந்த 40 வயதான ஒருவரே படுகாயமடைந்தார்.

வீதியோரமாக கைபேசியில் பேசிக்கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரை வாளால் வெட்டி படுகாயப் படுத்தி விட்டு அங்கிருந்து தப்பித்தனர்.

கை, கால், முதுகில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பொலிஸார் இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## துருக்கியின் கல்வி அமைச்சர் நேற்று கொழும்புக்கு வந்தார்!



கொழும்பு, ஜூலை 25
இலங்கைக்கும் துருக்கி குடியரசுக்கும் இடையிலான பொருளாதாரம் மற்றும் ஒத்துழைப்புக்கான கூட்டுக் குழுவின் 3ஆவது அமர்வில் பங்கேற்க துருக்கி குடியரசின் கல்வி அமைச்சர் யூசுப் டெக்கின் உள்ளிட்ட குழுவினர் நேற்று வியாழக்கிழமை காலை நாட்டுக்கு வந்தனர்.

அவர்களை கட்டுநாயக்க விமான நிலையத்தின் சிறப்பு விருந்தினர் வரவேற்பு முனையத்தில் வைத்து வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம். ஜயவர்தன வரவேற்றார். இலங்கைக்கான துருக்கி குடியரசின் தூதர் செமி லுட்பு டர்குட்டு இந் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வர்த்தக அமைச்சின் கீழ் உள்ள வணிகத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாநாடு கொழும்பில் நடைபெற உள்ளது. இதனூடாக இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, கல்வி, தொழில்நுட்பம் மற்றும் பல துறைகளில் ஒத்துழைப்பு ஊக்குவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

## கதிர்வீச்சு அபாயம் குறித்து விழிப்புணர்வு செயலமர்வு!

யாழ்ப்பாணம், ஜூலை 25
இரசாயனம், கதிர்வீச்சு மற்றும் அணுக்கசிவுகளால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை கையாள்தல், இது தொடர்பில் மாவட்டமட்ட கட்டமைப்பை உருவாக்கல் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு யாழ். மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த விழிப்புணர்வு செயலமர்வில் வளவாளர்களாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப்பணிப்பாளர் சான் பத்திரண, மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் ரி. என் சூரியராஜா ஆகியோர் பங்குபற்றினர்.

இந்த செயலமர்வில் பிரதேச செயலாளர்கள், முப்படைகளின் அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள், மருத்துவர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். (ஐ-05)

## கேரள கஞ்சாவுடன் இருவர் பொன்னாலையில் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 25
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் கஞ்சா போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவின் கீழ் இயங்கும் குற்றத் தடுப்பு பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொன்னாலை பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் காரைநகரை சேர்ந்த 32, 34 வயது நபர்களாவர். அவர்களிடமிருந்து 12 கிலோ 730 கிராம் எடையுடைய கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான இருவரும் சட்ட நடவடிக்கைக்காக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



ஜூலை - 25 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆடி 09
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.30
திதி : பிரதமை




## மேடம்
எதிர்பார்த்த சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

## இடபம்
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உங்கள் கை ஓங்கும். துணிச்சலாக செயல்பட வேண்டிய நாள்.

## மிதுனம்
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள்.

## கடகம்
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள்.மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை பகைத்து கொள்ளாதீர்கள்.

## சிம்மம்
பழைய கசப்பான சம்பவங்களை பேசிக் கொண்டிருக்க வேண்டாம். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

## கன்னி
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் முக்கிய பொறுப்புகளை ஏற்பீர்கள். இனிமையான நாள்.

## துலாம்
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். அலுவலகத்தில் மரியாதை கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

## விருட்சிகம்
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகி மகிழ்ச்சியான சூழல் உருவாகும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். திருப்தி உண்டாகும். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

## தனுசு
சந்திராஷ்டமம் இருப்பதால் மன உளைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமைத் தேவைப்படும் நாள்.

## மகரம்
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். புது சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

## கும்பம்
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உங்கள்கை ஓங்கும். தொட்டது துலங்கும்.

## மீனம்
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

# தொல்லியல் மரபுரிமைகளை பேண ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்

## யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பிரதீபன்

யாழ்ப்பாணம், ஜூலை 25

எமது தொல்லியல் மரபுரிமைகளைப் பேணுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

தொல்லியல் திணைக்களத்தின் 135 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தொல்லியல் தின நிகழ்வு யாழ்ப்பாணம் கோட்டை வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அரச அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "எமது வரலாற்று தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் மற்றும் மரபுரிமை மையங்களைப் பாதுகாப்பது அனைவரின் பொறுப்பாகும். தொல்லியல் மையங்கள், சுற்றுலாத் துறையுடன் இணைந்த வகையில் செயல்படுத்தும் போது மக்கள் இவை தொடர்பில் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பாக அமையும்.

யாழ். மரபுரிமைச் சின்னங்களைப் பார்வையிடுவதை மக்கள் இன்று குறைத்துக் கொண்டு செல்கின்றனர். பல்வேறுபட்ட தொல்லியல் சின்னங்கள் வரலாற்று பெறுமதி மிக்கவை. மிகப் பெறுமதியான பொக்கிஷமாக யாழ்ப்பாணக் கோட்டை காணப்படுகின்றது. ஆனால், எமது யாழ்ப்பாணம் மக்கள் இதனை பார்வையிடுவது குறைவாகவுள்ளது. காலிக் கோட்டை போல பல்வேறு சுற்றுலாசார் செயல்பாடுகளைக் கொண்ட கோட்டையாக யாழ்ப்பாணக் கோட்டையை மாற்ற வேண்டும். அதற்கான முயற்சிகளும் எம்மால் எடுக்கப்பட்டு வருகின்றன. ஒரு வாழும் கோட்டையாக யாழ்ப்பாணக் கோட்டையை மாற்றி தமிழ் மரபுரிமைகளை உள்ளடக்கிய கலையம்சங்களை யாழ்ப்பாணக் கோட்டையில் உள்ளடக்குவதன் மூலம் தமது வாழ்வியலின் குறிப்பிட்ட ஒரு நேரத்தை யாழ்ப்பாணக் கோட்டையில் கழிப்பதற்கு பலர் முன்வருவார்கள். மேலும், எங்களுடைய மாவட்டத்திலே பல தொல்லியல் சின்னங்கள் இருந்தாலும் மந்திரிமனை போல பல சின்னங்கள் நிலம் சார்ந்த பிரச்னைகளை எதிர்கொண்டு வருகின்றன. தமிழர்களுடைய மரபுரிமைச் சின்னங்கள் வழக்கொழிந்து போகின்ற நிலையில் காணப்படுகின்றன. பல்வேறுபட்ட ஆலயங்கள் இன்று நவீனமயப்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறான நிலையில் புராதன சின்னங்கள் அவற்றை விட்டு அகன்று போகின்ற தன்மை காணப்படுகின்றது.

மரபுரிமையுடனான சுற்றுலா மேம்பாட்டுக்கு அமையை, யாழ். பழைய கச்சேரியை உலக வங்கியின் அனுசரணையில் புனரமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் பங்கு பல்வேறுபட்ட விடயங்களில் எமக்கு கிடைக்கின்றன. எனவே, எமது மரபுரிமைகளைப் பேணுவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்"- என்றார்.

(எ)




# தொல்லியல் ஆர்வலர்களை கௌரவித்து வேரும் விழுதுகளும் விருது வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். மாவட்டத்தின் தொல்லியல் மரபுரிமைகளை தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து பாதுகாத்து வரும் தொல்லியல் ஆர்வலர்களை கௌரவிக்கும் முகமாக கடந்த 2024 ஆம் ஆண்டு முதல் "வேரும் விழுதுகளும்" விருது மூவருக்கு வருடாந்தம் வழங்கும் திட்டத்தை யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்களம் அறிமுகப் படுத்தியிருந்தது.

இதன் பிரகாரம் 2025 ஆம் ஆண்டுக்கான விருதுகளை யாழ். கலாசார உத்தியோகத்தரும் மரபுரிமை செயல்பாட்டாளருமான மார்க்கண்டு அருட்சந்திரன், தன்னார்வ மரபுரிமை செயல்பாட்டாளரான திருமதி அஜந்தா சுப்பிரமணியம், மரபுரிமை தன்னார்வலரும் மெட்டா நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட முகாமையாளருமான திருமதி பாலயோகஸ்தினி சிவயோகநாதன் ஆகியோர் தொல்லியல் மரபுரிமைகளை பேணிப் பாதுகாத்தமைக்காக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபனால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.


யாழ்ப்பாணம் கோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபை உதவிப் பணிப்பாளர், வடமாகாண சுற்றுலாத்துறை பணிப்பாளர், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை பீடாதிபதி, யாழ் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை தலைவர், தொல்லியல் திணைக்கள உதவிப்பணிப்பாளர், மத்திய கலாசார நிதியத்தின் செயல் திட்ட முகாமையாளர் ஆகியோரும் யாழ். பல்கலைக்கழக கலாசார சுற்றுலாத்துறை மற்றும் தொல்லியல் துறை மாணவர்களும் கலந்து கொண்டனர். (எ)

# மாகாண மட்ட உடற்பயிற்சி போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 25

மாகாண மட்ட உடற்பயிற்சி போட்டி யாழ். மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில், தீவக வலயத்துக்குட்பட்ட ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி சம்பியனானது.




இரண்டாவது இடத்தை இளவாலை [illegible] கல்லூரியும் மூன்றாவது இடத்தை வசாவிளான் மத்திய கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் தயாராக இருங்கள் போகும் இடம் காட்டுகிறோம்

## சபையில் கூறினார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஜூலை 25

**ஆட்சிக்கு வரும்போது எங்களைத் தயாராக இருக்குமாறு கூறினீர்கள். இப்போது நீங்களும் தயாராக இருங்கள். போகும் இடத்தைக் காட்டுகின்றோம் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசை பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ விமர்சித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வேலையாட்களின் வரவு - செலவுத் திட்ட நிவாரணப்படி திருத்தச் சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் தேசிய குறைந்தபட்ச வேதனத் திருத்த சட்டமூலம் ஆகியவற்றின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தற்போது ஆட்சியில் இருப்பவர்கள் 15 வருடங்களுக்கு முன்னர் கூறியவற்றை இப்போதும் தெரிவித்து வருகின்றனர். ஆட்சிக்கு வந்த பின்னரும் அதே பொய் களைக் கூறுகின்றனர்.

சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் கூறுகின்றீர்கள். அது நல்ல விடயம். ஆனால், சம்பளத்தை அதிகரித்து அந்தச் சம்பளத்துக்கு நிகராக வரியை அறவிட்டு மீண்டும் அரசுக்குப் பெற்றுக் கொள்கின்றீர்கள்.

இதனால் சம்பளம் அதிகரிக்கப்பட்டமையின் நன்மை ஊழியருக்குக் கிடைக்கின்றதா? அவ்வாறு இல்லை. வரிக் கொள்கைக்கு அமைய அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் பெருமளவு தொகையை அரசு பெற்றுக்கொள்கின்றது.



ஆட்சிக்கு வர முன்னர் ஒரே கையெழுத்தில் செய்து விடுவோம் என்று கூறினீர்கள். ஆனால், அது இலகுவான விடயம் அல்ல என்பது இப்போது புரிந்திருக்கும்.

இப்போது சகல அரச நிறுவனங்களிலும் பழிவாங்கல்கள் இடம்பெறுகின்றன. தொழிற்சங்கங்கள் ஒடுக்கப்படுகின்றன. தொழிற்சங்கங்களை நீங்களே வழிநடத்தினீர்கள். ஆசிரியர் சங்கத்தினர் பாடசாலைக்குச் செல்லாமல் அதில் இருந்தனர். இப்போது தொழிற்சங்கங்களைக் கைவிட்டு, இடமாற்றங்களைச் செய்து அரச சேவையை செயலிழக்கச் செய்ய வேண்டும் என்று கூறுகின்றீர்கள் - என்றார். (அ)

# தரம் 5 மாதிரி வினாத்தாளில் தவறான மொழி பிரயோகம்!

கொழும்பு, ஜூலை 25

அநுராதபுரம் கல்வி வலயத்தில் தரம் 5 மாணவர்களுக்கு திங்கட்கிழமை வழங்கப்பட்ட புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை வினாத்தாளில் தவறான மொழிப் பிரயோகம் காணப்பட்டுள்ளது. இது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் குழப்பத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும் நோக்கில், மாதிரி வினாத்தாள், கல்வி வலயத்திற்குட்பட்ட 2,000 மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள் இந்த வினாத்தாள் தயாரித்து அச்சிட்டு உரிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு வழங்கியுள்ளனர்.

திங்கட்கிழமை காலை மாணவர்கள் வினாத்தாளைப் படிக்கத் தொடங்கியவுடன், அவர்கள் அமைதியற்றவர்களாகத் தோன்றியதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

பின்னர் வினாத்தாளில் பல எழுத்துப் பிழைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. குறிப்பாக கேள்வி எண் 29 இல் உள்ள ஒரு வினாவில் பொருத்தமற்ற மற்றும் புண்படுத்தும் மொழியைப் பயன்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இதனை அடுத்து வலயக் கல்வி அலுவலகம் பிழைகளைச் சரி செய்து பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்கு பரீட்சை வினாத்தாளை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுத்தது.

இந்தப் பிரச்னை குறித்துப் பேசிய இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ, "இவர்கள் ஆரம்ப நிலை பிள்ளைகள். பிழைகள் நிறைந்த, குறிப்பாக தவறான மொழி நடையைக் கொண்ட பரீட்சை வினாத்தாள் ஒன்றை அவர்களுக்கு வழங்குவது ஏற்றுக்கொள்ள முடியாதது" என்றார்.

சம்பவம் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.எம்.எச்.எஸ்.கே. ஜயலத் தெரிவித்துள்ளார். (அ)

# சுங்க திணைக்கள அதிகாரிகள் போன்று நடித்து பணம் மோசடி

## இருவர் பொலிஸாரினால் கைது

கொழும்பு, ஜூலை 25

சுங்கத் திணைக்கள அதிகாரிகள் போன்று போலியாக நடித்து ஆறு இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்த இருவர் கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் வைத்து கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை, வத்துவல பிரதேசத்தில் உள்ள ஒருவர் தனது வீட்டை விற்பனை செய்ய உள்ளதாக முகப்புத்தகத்தில் விளம்பரம் செய்துள்ளார்.

அதன்படி பெண் ஒருவர் தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு வீட்டைக் கொள்வனவு செய்வதற்கான பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

சில தினங்களில் மேற்படி பெண்ணுடன் மற்றும் ஒருவர் வந்துள்ளார். அவர் இலங்கை சுங்கப் பிரிவில் வேலை செய்வதாகத் தெரிவித்து வீட்டுத் தளபாடங்களை குறைந்த விலையில் பெற்றுத் தர முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதன்படி இணக்கம் தெரிவித்த வீட்டு உரிமையாளர் 605,000 ரூபா பணத்தை வழங்கப்பட்ட வங்கிக் கணக்கு இலக்கம் ஒன்றில் வைப்பில் இட்டுள்ளார்.

பல நாட்கள் கழிந்தும் தமக்குரிய பொருட்கள் கிடைக்காத காரணத்தால் அவர் கட்டுகஸ்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்படி விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பொல்கொல்ல, குண்டேபான பகுதியில் இரண்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர். (அ)

# அரசியலுக்காக பொலிஸ் அதிகாரம் பயன்படுத்தப்பட்டால் என்னவாகும்?

## தேசபந்து விடயம் சிறந்த உதாரணம் என்கிறார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஜூலை 25

தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் மிகச் சிறந்ததாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர் அரசியல் உத்தரவுகளுக்கமையவே செயல்பட்டார். அரசியல் இலக்குகளை அடைவதற்கு பொலிஸ் அதிகாரம் பயன்படுத்தப்பட்டால் என்னவாகும் என்பதற்கு தேசபந்து விவகாரம் சிறந்த உதாரணமாகும் என முன்னாள் அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பொலிஸ்மா அதிபரை பதவி நீக்குவதற்கான விதிமுறையை நீக்குவதற்கு பாராளுமன்றத்துக்கு அதிகாரம் உள்ளது. அதற்கமையவே ஒரு முறையான விசாரணை முன்னெடுக்கப்பட்டு அவர் அந்த பதவியை வகிக்க தகுதியற்றவர் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் சிறந்த தீர்மானம் என்று நான் நினைக்கின்றேன்.

காரணம் தேசபந்து பல சந்தர்ப்பங்களில் சட்டத்துக்கமைய செயற்படவில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர் அரசியல் உத்தரவுகளுக்கமையவே செயல்பட்டார். எனவே அவரது இந்த விவகாரம் இன்றைய அரச உத்தியோகத்தர்களுக்கு சிறந்த பாடமாகும்.

இலுக்பிட்டியவின் உதாரணத்தைப் போன்று தேசபந்துவும் சிறந்த உதாரணமாகும். இந்த சம்பவங்கள் நாட்டுக்கு சிறந்த படிப்பினையுமாகும். அரசியல் இலக்குகளை அடைவதற்கு பொலிஸ் அதிகாரம் பயன்படுத்தப்பட்டால் என்ன வாகும் என்பதற்கு தேசபந்து விவகாரம் சிறந்த உதாரணமாகும்.

அதனால் இன்று அவர் தனித்து விடப்பட்டிருக்கின்றார். அரசாங்கம் பாராளுமன்ற செயல்முறைகளிலும் பொலிஸ் ஆணைக்குழுவின் சுதந்திரத்திலும் தலையிடுமாயின் அது தவறாகும். இவற்றைக் கருத்திற் கொண்டு பொருத்தமான தகுதியான ஒருவரை அடுத்த பொலிஸ்மா அதிபராக நியமிக்க வேண்டும்-என்றார். (அ)

# மின்சார சபை திருத்த சட்டமூலத்தை தன்னிச்சையாக நிறைவேற்ற முயற்சி

## மரிக்கார் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 25

சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் நிறைவேற்ற வேண்டிய மின்சாரசபை திருத்த சட்டமூலத்தை, மின்சக்தி அமைச்சர் தன்னிச்சையாக நிறைவேற்ற முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பாராளுமன்றத்தில் இலங்கை மின்சார சபை திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் இயலாமை இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சார சபை உள்ளிட்ட பல முக்கிய தரப்பினரை அழைத்து இந்த சட்டமூலத்தில் காணப்பட்ட சிக்கலான விடயங்களை நிவர்த்தி செய்து கொடுத்துள்ளோம்.

இதன்போது இரு காரணிகள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமையவே செயல்படுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டது.

ஆனால் தற்போதுள்ள மின்சக்தி அமைச்சர் தன்னிச்சையாக அவரது விருப்பத்துக்கமைய இந்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

2024 இல் காஞ்சன விஜயசேகர சமர்ப்பித்த அதே சட்டமூலத்தையே தற்போதைய அரசாங்கமும் சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தொழிற்சங்கங்கள் கால அவகாசம் கோரியும் 7 மாதங்கள் கடந்தும் அமைச்சர் அவர்களை சந்திக்க தயாராக இல்லை-என்றார். (அ)

# நுவரெலியா, கண்டி மாவட்டங்களில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு!

கொழும்பு, ஜூலை 25

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களின் பிரதான அரச வைத்தியசாலைகளில் முக்கிய நோய்களுக்கான மருந்து பொருட்கள் தட்டுப்பாட்டில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால், மருத்துவர்கள் நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளை தனியார் மருந்தகங்களில் வாங்குமாறு அறிவுறுத்தி வருகின்றனர்.

புற்றுநோய், தொற்றுநோய், நீரிழிவு போன்ற கடுமையான நோய்களுக்கு தேவையான மாத்திரைகள் மற்றும் தடுப்பூசிகள் அரச வைத்தியசாலைகளில் குறைவாக உள்ளதால், நோயாளர்கள் பெரும் சிரமத்தில் உள்ளனர். பலர் தனியார் மருந்தகங்களில் அதிக விலையில் மருந்துகளை வாங்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இதனால், வருமானம் குறைந்த குடும்பங்கள் குறிப்பாக பெருந்தோட்டம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு மருந்து பெறுவதில் பொருளாதார சிரமங்கள் ஏற்பட்டு, அயலவர்கள் மற்றும் பரோபகாரிகளிடம் உதவிக்காக நாடி வருகின்றனர்.

இந்நிலையில், பொதுமக்கள் மற்றும் சமூக சங்கங்கள், உடனடியாக இந்த பிரச்னையை தீர்க்க நடவடிக்கை அரசு எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

நோயாளர்கள் சிலர் மருந்து வாங்குவதையும் தவிர்க்கின்றனர் என்பதும் கவலைக்குரியது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த தலைவர்களை நாம் வடக்கில் உருவாக்குவோம்!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க



கொழும்பு, ஜூலை 25

"தேசிய மக்கள் சக்தி வடக்கிலும் ஆழமாக காலூன்றும். வெளியில் இருந்து தலைவர்களை ஏற்றுமதி செய்யமாட்டோம். வடக்கு மண்ணில் இருந்தே சிறந்த தலைவர்களை உருவாக்குவோம். மலையகத்திலும் தேசிய மக்கள் சக்தியே பிரதான கட்சி."-என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அரச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாம் தெற்கில் பல வருடங்கள் அரசியலில் ஈடுபட்டோம். வடக்கில் அவ்வாறு செய்யவில்லை. 2010 ஆம் ஆண்டில் இருந்துதான் வடக்கில் செயற்பட ஆரம்பித்தோம். எனினும், ராஜபக்ஷ ஆட்சியில் அதற்குரிய சுதந்திரம் இருக்கவில்லை. எமது லலித், குகன் சகோதரர்கள் கடத்தப்பட்டனர்.

தோழர் சுனில் ஹந்துனெத்திமீது தாக்குதல் நடத்தப்பட்டது இப்படியான சூழ்நிலையே அன்று இருந்தது." எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

2015 இல் இருந்து தீவிரமாக செயற்பட ஆரம்பித்தோம். ஜனாதிபதி தேர்தலைவிடவும் பொதுத்தேர்தலில் எமக்கு வடக்கில் பேராதரவு கிடைக்கப் பெற்றது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலிலும் எமக்கு ஆதரவு கிடைக்கப் பெற்றது. தமிழ்க் கட்சிகள் எனக் கூறிக்கொள்ளும் சில தரப்புகள் தமிழ் ராஜபக்ஷக்களாக செயற்பட்டு, இனவாதம் பரப்பின. காணி விவகாரத்தையும் கையில் எடுத்தன. எனவே, உள்ளூட்சிசபைத் தேர்தலில் எமக்கு வடக்கில் பின்னடைவு ஏற்பட்டதாக நாம் கருதவில்லை. யாழ்.மாவட்டத்தில் மாத்திரம் 81 உறுப்பினர்கள் உள்ளூட்சி மன்றங்களில் உள்ளனர்."-எனவும் அவர் கூறினார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையகத்திலும் தேசிய மக்கள் சக்தியே பிரதான கட்சியாகும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டார். (அ)

# ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கான தண்டனை தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 25

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்கு உள்ளான குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் முன்னாள் கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கு எதிரான வழக்கின் தண்டனைத் தீர்ப்பை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

தீர்ப்பு நேற்று அறிவிக்கப்படவிருந்தது.

எனினும், உயர்நீதிமன்றம் தீர்ப்பை செப்ரெம்பர் 23 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும் இலத்திரனியல் விஸா தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை மீறி தனியார் நிறுவனமொன்றுக்கு அனுமதி அளிக்கப்பட்டமை தொடர்பில் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் முன்னாள் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய சுமார் ஒரு வருட காலமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சரணடையாவிட்டால் சொத்துகள் முடக்கம்!

## ரோஹிதவின் மகளுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 25

சட்டவிரோதமாக நாட்டுக்குள் ஜீப் வாகனம் ஒன்றை இறக்குமதி செய்த சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்ற பொலிஸார், பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மகளும், அவரது கணவரும் விரைவில் சரணடையாவிட்டால்,

அவர்களது சொத்துக் களை முடக்க நீதிமன்ற உத்தரவைப் பெற நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவித் துள்ளனர்.

அவர்கள் தங்கியிருக்கலாம் எனக் கூறப்படும் பல இடங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆனால் அவர்கள் எந்த இடத்திலும் இருப்பது உறுதியாகவில்லை என்றும் பொலிஸார் கூறினர்.

இந்த வழக்கில் குற்றவாளிகளாகக் கருதப்படும் இருவரும் விரைவில் கைது செய்யப்பட உள்ளதாக விசாரணை அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகின்றது.

இதனுடன் தொடர்புடைய வழக்கில், கைது செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகன் தற்போது நீதிமன்றம் மூலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சிப்பான இம்ரானின் சகா கைது!

கொழும்பு, ஜூலை 25

தற்போது வெளிநாட்டில் தலைமறைவாக உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலின் தலை வரான கஞ்சிப்பான இம்ரானின் நெருங்கிய சகா எனக் கூறப்படும் ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் இந்தியாவிலிருந்து நேற்று நாடு கடத்தப்பட்ட நிலையிலேயே பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். (அ)

# தக்காளி விலை வீழ்ச்சி

கொழும்பு, ஜூலை 25

சந்தையில் தக்காளி விலை வேகமாகச் சரிந்து வருவதால் தக்காளி உற்பத்தியாளர்கள் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

ஒரு கிலோகிராம் தக்காளியை ரூ.15 முதல் 20 வரை வர்த்தகர்கள் கொள்வனவு செய்வதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வெலிமடை, எல்ல, அடம்பிட்டி, நெலுவ, ஹாலிஎல, பண்டாரவளை உள்ளிட்ட பல பகுதிகளில் தற்போது தக்காளி அறுவடை நடைபெற்று வருகிறது.

இருப்பினும், கடந்த காலங்களில் ஒரு கிலோகிராம் தக்காளி ரூ.900 முதல் 1000 வரை விற்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 100 ரயில் நிலையங்களை நவீனமயமாக்கும் திட்டம்



கொழும்பு, ஜூலை 25

100 ரயில் நிலையங்களை நவீனமயப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான வர்த்தகர்கள் குழுவின் முக்கிய சந்திப்பு நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவின் தலைமையில் இடம்பெற்றது.

இந்த திட்டம் தொடர்பாக கருத்து தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர்,

நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டியது அவசிய மாகும். அதற்கான பங்களிப்பு தளத்தை தற்போதைய அரசாங்கம் உருவாக்கியுள்ளது. சுயமாக முன்வந்த தனியார் வர்த்தகர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்." எனக் கூறினார்.

உலகத் தரத்திற்கேற்ப தூய்மையும், பாதுகாப்பும், பயண வசதிகளும் கொண்ட புதிய புகையிரத நிலைய கட்டமைப்பை உருவாக்க நோக்கமாகக் கொண்ட இந்தத் திட்டம் அரச, தனியார் மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்படும் பொதுமக்கள் - தனியார் கூட்டுத்தாபனத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது.

இந்த சந்திப்பில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார, மேலதிக செயலாளர் எஸ்.பீ.சி. சுகீஷ்வர மற்றும் பல தனியார் வர்த்தகர்கள் பங்கேற்றனர். (அ)

# சுகாதார அதிகாரி மீதான துப்பாக்கிச் சூடு தோல்வி!

கொழும்பு, ஜூலை 25

தெஹிவளையில் உள்ள எஸ்.டி.எஸ். ஜெயசிங்க மைதானத்துக்கு அருகில் நேற்று மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர் ஒருவர் சுகாதார நிர்வாக அதிகாரி மீது துப்பாக்கிச் சூடு நடத்த முயன்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருப்பினும், துப்பாக்கி செயலிழந்ததால் சந்தேக நபர் சம்பவ இடத்தை விட்டு தப்பி ஓடிவிட்டதாக கூறப்படுகிறது.

சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

மேலும், துப்பாக்கிச் சூட்டு முயற்சிக்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை.

சந்தேக நபரை அடையாளம் காண அப்பகுதியில் உள்ள சி.சி.ரி.வி காட்சிகளை பொலிஸார் ஆய்வு செய்து வருகின்றனர். (அ)

# ரம்புட்டான் மரங்கள் சம்பந்தப்பட்ட பாதிப்புகள் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 25

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த ஆண்டு ரம்புட்டான் மரங்கள் சம்பந்தப்பட்ட பாதிப்புகள் அதிகரித்துள்ளதாக, வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ரம்புட்டான் மரங்களை விலங்குகளிடமிருந்து பாதுகாக்கச் சிலர் மின்சாரக் கம்பிகளை இடுவதால் இந்த விபத்துக்கள் ஏற்படுவதாக கொழும்பு தேசிய மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் விசேட அறுவை சிகிச்சை நிபுணர் வைத்தியர் விராஜ் ரோஹண அபேகோன் தெரிவித்தார்.

அதன்படி, கொழும்பு தேசிய மருத்துவமனையின் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவில் தற்போது பலர் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிறுவர்களுக்கு ரம்புட்டானை ஊட்டும்போது பெற்றோர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ)

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு பின்னால் உள்ள 'பிக்பொஸ்' யார்?

## நிசாம் காரியப்பர் எம்.பி. கேள்வி

கொழும்பு, ஜூலை 25

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னணியில் உள்ள "பிக் பொஸ்" யார் என்பது குறித்து இணைமையற்ற விசாரணை மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

இது சாதாரண பயங்கரவாதம் அல்ல. திட்டமிட்ட, அமைப்பு சார்ந்த தாக்குதலாக இது நடந்துள்ளது. அதன் பின்னணியில் இருந்து செயற்பட்ட பிக் பொஸ் யார் என்பதைக் கண்டறிய இராணுவத்தின் முழு அதிகாரத்தையும் பயன்படுத்தி விசாரணை நடத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் பூர்வீகமான நிலங்கள் பறிக்கப்படுவது தொடர்கின்றது

## சத்தியலிங்கம் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

**வவுனியா வடக்கில் உள்ள தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த நிலங்கள் ஆக்கிரமிக்கப்படும் நிலைமைகள் தொடர்ந்து கொண்டு இருக்கிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மேலும், வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவிலுள்ள வெடிவைத்தகல்லு கிராம அலுவலர் பிரிவு தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த பாரம்பரிய பிரதேசம். இங்குள்ள மக்களின் பிரதான வாழ்வாதாரம் விவசாயம்.

1983 காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றம், அதனை தொடர்ந்து நடைபெற்ற அசம்பாவிதங்களால் அங்கிருந்த மக்கள் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் குடியேறியிருந்தனர்.

இதனால் நீண்டகாலமாக அங்கிருந்த தமிழ் மக்களுக்கு சொந்தமான விவசாய நிலங்கள் பயிர்ச்செய்கை செய்யப்படாது பராமரிப்பின்றி இருந்தன. வெடிவைத்தகல்லு கிராம தமிழ் மக்களால் நீண்டகாலமாக கைவிடப்பட்டிருந்த மூன்று சந்ததிக்கு முற்பட்ட வரலாற்றை கொண்ட கைவிடப்பட்ட குளத்தையும் ஏறத்தாழ 150 ஏக்கருக்கு மேற்பட்ட வயற்காணிகளையும் கொண்டது திரிவச்சகுளம்.

இறுதி யுத்தத்திற்கு பின்னராக மக்கள் மீள்குடியேறிய நிலையில் காணி சொந்தக்காரர்கள் சிலர் 2019 காலப்பகுதியில் தமது மூதாதையரின் காணிகளை பயிர் செய்கைக்காக துப்புரவு செய்தபோது வனப்பாதுகாப்பு திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கலும் செய்யப்பட்டது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காணி உரிமையாளர்கள் தமது காணிக்குள் செல்வதற்கு தடையும் விதிக்கப்பட்டிருந்தது.

5 வருடங்கள் நீடித்த வழக்கு 2024 இல் போதுமான ஆதாரங்களை வனப்பாதுகாப்பு திணைக்களத்தினரால் சமர்ப்பிக்க முடியாத காரணத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆனாலும், இந்த காலப்பகுதியை தமக்கு சாதகமாக்கி கொண்ட அயல்கிராமத்தில் குடியேற்றப்பட்ட பெரும்பான்மையின விவசாயிகள் மகாவலி அதிகார சபையின் துணையுடன் குத்தகை அடிப்படையில் தமிழ் மக்களால் துப்பரவு செய்யப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் 10 விவசாயக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் தற்போது 25 குடும்பங்களாக அதிகரித்துள்ளது. அத்துடன், நெடுங்கேணி கமநல சேவைகள் நிலையத்தில் "அந்தரவெவ கமக்காரர் அமைப்பு" என்று பதிவு செய்துள்ளனர்.

வனப்பாதுகாப்பு திணைக்களத்தால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் காணி உரிமையாளர்களுக்கு காணிக்குள் செல்வதற்கு தடை விதித்துள்ள காலப்பகுதியில் எவ்வாறு மகாவலி அதிகார சபை அந்தக் காணிகளை குத்தகைக்கு வழங்கமுடியும்?

புதிய பெயரில் கமக்காரர் அமைப்பாக பதிவு செய்ய முடியும் என்றால் இதற்கு அரசாங்க அதிகாரிகளும் பக்கச்சார்பாக செயல்பட்டுள்ளார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஓரிரு மாதங்களுக்கு முன்னர் அந்தப் பிரதேசத்தில் 200 ஏக்கருக்கு அதிகமான பிரதேசம் திட்டமிட்ட வகையில் காடழிப்பு செய்யப்பட்டுள்ளது.-என்றார். (ஐ)

# கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது!

கொழும்பு, ஜூலை 25

மஹரகம பொலிஸார் மற்றும் மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவு அதிகாரிகளின் சிறப்பு நடவடிக்கையில் தொடர்ச்சியான திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முதல் சம்பவத்தில் மஹரகம, கொடிகமுவ பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரை, திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் இரண்டு போலி இலக்கத் தகடுகளுடன் மஹரகம பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேக நபர் கொட்டாவ, கெஸ்பேவ மற்றும் மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்ட பகுதிகளில் பல வீடுகள் உடைத்தல் மற்றும் திருட்டுகளுடன் தொடர்புடையவர் என கண்டறியப்பட்டுள்ளது.

இவரிடமிருந்து திருடப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு தொலைக்காட்சி, கமெரா மற்றும் ஐந்து கைத்தொலைபேசிகளை பொலிஸார் மீட்டனர்.

மற்றொரு நடவடிக்கையில், மேல் மாகாண வடக்கு குற்றப் பிரிவு, ஆயுதமேந்திய கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக பல பிடியாணைகளில் தேடப்படும் 47 வயது சந்தேக நபரைக் கைது செய்தது.

குறித்த நபர் மஹாபாகே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில்கைது செய்யப்பட்டார்.

பெப்ரவரி 25 ஆம் திகதி மஹார சிறைச்சாலையிலிருந்து வத்தளை நீதிவான் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போது, அவர் காவலில் இருந்து தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நேரத்தில், சந்தேக நபர் போலியான தேசிய அடையாள அட்டையை வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ராகம, கந்தானை, மினுவாங்கொடை மற்றும் சபுகஸ்கந்த ஆகிய இடங்களில் நடந்த பல ஆயுதக் கொள்ளைகளில் அவர் ஈடுபட்டதாக நம்பப்படுகிறது.

அவருக்கு எதிராக நான்கு பிடியணை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ)

# இலங்கை கடவுச்சீட்டு 91ஆவது இடத்துக்கு!

கொழும்பு, ஜூலை 25

இலங்கை கடவுச்சீட்டானது ஹென்லே கடவுச்சீட்டு குறி யீட்டில் 5 இடங்கள் முன்னேறியுள்ளன.

அதன்படி, இலங்கை கடவுச்சீட்டானது குறியீட்டு புள்ளிகளுக்கு அமைவாக 96ஆவது இடத்திலிருந்து 91ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இலங்கை கடவுச்சீட்டு கடந்த வருடத்தில் 4 இடங்கள் முன்னேறி இருந்தது.

ஹென்லே கடவுச்சீட்டு குறியீடானது, இந்த வருடத்தில் முன் விஸா இல்லாமல் தங்கள் நாட்டு குடிமக்கள் எத்தனை இடங்களுக்குச் செல்லலாம் என்பதன் அடிப்படையில் நாடுகளை தரவரிசைப்படுத்தி வருகிறது.

அதன்படி, உலகம் முழுவதும் 42 இடங்களுக்கு இலங்கையர்கள் விஸா இல்லாத அனுமதியைப் பெற முடியும்.

சிங்கப்பூர் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் 193 நாடுகளுக்கு விஸா இல்லாமல் செல்லலாம். அதே நேரத்தில் ஜப்பான் மற்றும் தென் கொரிய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் 190 நாடுகளுக்கு விஸா இல்லாமல் செல்வதற்கு அனுமதிக்கிறது.

இதேவேளை, குறியீட்டில் 8 இடங்கள் முன்னேறியுள்ள இந்தியா, 85ஆவது இடத்திலிருந்து தற்போது 77ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

பாகிஸ்தான், ஈராக், சிரியா மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவை குறியீட்டில் கடைசி நான்கு இடங்களைப் பிடித்துள்ளன. (அ)

# சம்பள அதிகரிப்புக்கு நடவடிக்கை இல்லை!

கொழும்பு, ஜூலை 25

தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை 1700 ரூபாவாக உயர்த்தவேண்டும் எனக் கூறி அரசாங்கத்தை வலியுறுத்தியபோதிலும், அதனை அமைச்சர் அனில் ஜயசிங்க பாராளுமன்றத்தில் நிராகரித்துள்ளார் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வேதனத்தை உயர்த்த வேண்டும் என்பது அரசாங்கத்தின் வாக்குறுதியாக இருந்த போதிலும்,

அதனை நடைமுறைப்படுத்தும் சந்தர்ப் பங்களில் அவர்கள் புறக்க ணித்து வருகின்றனர்.

குறிப்பாக, அந்த சம்பள உயர்வுக்கான பிரே ரணையை பாராளுமன்றத்தில் நிராகரித்தது வருத்தத்திற்குரி யது-என்றார். (அ)

# நீரில் அடித்துச் செல்லப்பட்ட யானை

கொழும்பு, ஜூலை 25

மாதுரு ஓயா தேசிய பூங்காவிலிருந்து தண்ணீர் குடிக்க சென்ற யானை ஒன்று அரலகங்வில பிம்புரத்தேவ பகுதியில் உள்ள கால்வாயில் வீழ்ந்துள்ளது.

யானை சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டதாக வெஹெரகல வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வனவிலங்கு அதிகாரிகள் கயிறுகள் மற்றும் ரயர்கள் உதவியுடன் யானையை மீட்க முயற்சித்தனர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# நாடு முழுவதும் காயமடைந்த 20 யானைகள் சிகிச்சையில்!

கொழும்பு, ஜூலை 25

நாடு முழுவதும் தற்சமயம் குறைந்தது 20 காயமடைந்த யானைகள் சிகிச்சை பெற்று வருவதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சிகிச்சை பெறும் பெரும்பாலான யானைகள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதன்படி, அனுராதபுரம் வனவிலங்கு வலயத்தில் 8 காட்டு யானைகளும், பொலனறுவை வனவிலங்கு வலயத்தில் நான்கு காட்டு யானைகளும், வடமேற்கு வனவிலங்கு வலயத்தில் மூன்று காட்டு யானைகளும், ஊவா வனவிலங்கு வலயத்தில் ஐந்து காட்டு யானைகளும் இவ்வாறு சிகிச்சை பெற்று வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, திகம்பதஹ பகுதியில் பதிவான மூன்று காட்டு யானைகள் இறப்புகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் பிற உதவிகளை வழங்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் ஜெனரல் ரஞ்சன் மாரசிங்க தெரிவித்தார். (அ)

# 'சிற்றி ஒவ் ட்ரீம்ஸ்' திறப்பு விழாவில் ஷாருக்கானுக்கு பதிலாக ஹிருத்திக்!

கொழும்பு, ஜூலை 25

தெற்காசியாவின் முதல் ஒருங்கிணைந்த சொகுசு ஹோட்டலான "சிற்றி ஒவ் ட்ரீம்ஸ் சிறீலங்கா"வின் பிரமாண்ட திறப்பு விழா நிகழ்வுக்காக பொலிவூட் முன்னணி நட்சரத்திரம் ஹிருத்திக் ரோஷன் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

முன்னதாக திறப்பு விழாவில் பொலிவூட் சூப்பர் ஸ்டார் ஷாருக்கான் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டது.

எனினும், பின்னர் எதிர்பாராத மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களினால் அவர் தொடக்க நிகழ்வில் கலந்து கொள்ளமாட்டார் என்று ஏற்பாட்டாளர்கள் உறுதிபடுத்தினர்.

இந்த நிலையில் மேற்கண்ட அறிவிப்பு வந்துள்ளது.

இந்தியாவின் மிகவும் பிரபலமான நடிகர்களில் ஒருவரான ஹிருத்திக் ரோஷன், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் மெல்கோ ரிசோர்ட்ஸ் அண்ட் என்டர்டெயின்மென்ட் இணைந்து உருவாக்கிய மெகா திட்டத்தின் அதிகாரபூர்வ திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வு உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்க்கும் என்று ஏற்பாட்டாளர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

1.2 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான இந்த திட்டம் உலகத் தரம் வாய்ந்த, அதி-ஆடம்பரமான நுவா ஹோட்டல் மற்றும் ஒரு உயர் நிலை வர்த்தக அங்காடி ஆகியவை இதில் அடங்கும்.

கொழும்பை உலகளாவிய சுற்றுலா மற்றும் பொழுது போக்கு தலமாக நிலை நிறுத்துவதில் இந்த தொடக்க விழா ஒரு மைல்கல்லாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சிற்றி ஒவ் ட்ரீம்ஸ் சிறிலங்காவின் அதிகாரபூர்வ ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் 2 அன்று இடம்பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உணர்வுபூர்வமாக நடைபெற்ற கறுப்பு ஜூலை நினைவேந்தல்

காரைதீவு, ஜூலை 25

**கறுப்பு ஜூலை கலவரத்தின் 42 ஆவது வருடத்தை நினைவுகூரும் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை காரைதீவில் நடைபெற்றது.**

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை 42 வருட வலி சுமந்து ஈழத்தமிழர்களின் இனப்படுகொலைக்கு எதிராக அம்பாறை மாவட்டம், காரைதீவு பிரதேச சபையின் தவிசாளர் சு. பாஸ்கரன் தலைமையில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

இதில், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட பிரதேச மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

தவிசாளர் பாஸ்கரன் உரையாற்றுகையில்,

காரைதீவு எல்லையில் கறுப்பு ஜூலை 1983 ஆம் ஆண்டு மறக்கவும் மன்னிக்கவும் முடியாத நாளாக காணப்படுகின்றது.

1983 ஜூலை 23 தொடக்கம் 30 காலப்பகுதியில் இனப்படுகொலை அதாவது தமிழினம் மீதான படு கொலை மிகவும் கொடூரமாக காணப்பட்டது. அதாவது பேரின வாத சக்திகளால் இந்த கொடூரமான நிகழ்வு அரங்கேற்றப்பட்டது. இந்த இனப்படுகொலையில் குறைந்தது அந்த காலகட்டத்தில் மூவாயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டதாக அறிந்துள்ளோம்- என்றார். (எ)

# "மக்களின் பணம் மக்களுக்காகவே" மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு


காரைதீவு, ஜூலை 25

காரைதீவு பிரதேச சபை தவிசாளர் எஸ். பாஸ்கரனின் மக்களின் பணம் மக்களுக்காகவே" நிகழ்ச்சித் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு, தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு என்பன காரைதீவு கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை காரைதீவு பிரதேச சபை தவிசாளர் எஸ். பாஸ்கரனின் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளரும் காரைதீவு கோட்டக்கல்வி பணிப்பாளருமான ஏ. சஞ்சீவனின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் காரைதீவு கல்விக்கோட்டத்தின் 250இற்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இந்தக் கருத்தரங்கை கல்முனை வலயக் கல்வி அலுவலக நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜாபீர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இதில், காரைதீவு சண்முகா மகா வித்தியாலய ஆசிரியர் வீ. விமலேஸ்வரன் வளவாளராக கலந்து கொண்டார். (எ-01)





# உணவகங்களில் சுகாதார பரிசோதனை முன்னெடுப்பு

சாய்ந்தமருது, ஜூலை 25

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட கடற்கரையோர வீதியில் அமைந்துள்ள உணவகங்களில் சுகாதார பரிசோதகர்களால் நேற்று முன்தினம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த பரிசோதனையின் போது மனித நலனுக்கு ஏற்புடையதல்லாத மற்றும் சுகாதார நெறிமுறைகளை பின்பற்றாமல் உணவுகள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட உணவகங்கள் கண்டறியப்பட்டன. இதனைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், எதிர்காலத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

மேலும் சுட்டுத் துண்டுகளில் முறையான எச்சரிக்கை அறிவித்தல் இன்றி விற்பனை செய்யப்பட்ட குளிர்பான போத்தல்கள் கைப்பற்றப்பட்டு அதனைச் சார்ந்தும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இச் செயல்பாடானது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதன் தலைமை மற்றும் பங்களிப்புடன் நடைபெற்றது. (எ-01)

# கல்முனை மாநகர சபை பிரதேசத்தில் மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை

கல்முனை, ஜூலை 25

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாட்டிறைச்சியை கட்டுப்பாட்டு விலையில் விற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஒரு கிலோ தனி இறைச்சியை 2300 ரூபாய்க்கும் 250 கிராம் முள் சேர்க்கப்பட்ட ஒரு கிலோ இறைச்சியை 2000 ரூபாய்க்கும் விற்பனை செய்வது என்று விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை தொடக்கம் இந்த நிர்ணய விலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை, மாநகர சபையில் இறைச்சிக் கடைக்காரர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர்களது இணக்கத்துடன் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாட்டிறைச்சியானது எல்லையின்றி மிகக் கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக பொது மக்களிடமிருந்து தொடர்ச்சியாக கிடைக்கப் பெற்று வந்த முறைப்பாடுகளையடுத்து மாநகர ஆணையாளர், இறைச்சிக் கடைக்காரர்களை மாநகர சபைக்கு அழைத்து இறைச்சி விலையை கட்டுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன்படி, அனைத்து இறைச்சிக் கடைகளிலும் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிர்ணய விலையில் இறைச்சி விற்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு கல்முனை மாநகர சபையின் வருமானப் பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (எ-01)

# மக்கள் வாழும் காணியை தனியார் நிறுவனத்துக்கு வழங்க நடவடிக்கை

**இம்ரான் எம்.பி. சபையில் சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஜூலை 25

திருகோணமலை முத்துநகர் மக்கள் 53 வருடங்களாக விவசாயம் செய்து வந்த காணியை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால் அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிட்டு மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின்திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கம்பனிகள் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

“திருகோணமலை முத்துநகர் மக்கள் 53 வருடகாலமாக விவசாயம் செய்துவந்த நிலம் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இதனால் 352 விவசாயிகள் 1000இற்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள் பாதிக்கப்படப் போகின்றன. இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த மக்கள் தற்போது வீதிக்கிறங்கி போராட ஆரம்பித்துள்ளனர்.

இந்த நடவடிக்கை கடந்த கால அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாக இருந்தாலும், தற்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்துக்கு இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து அந்த மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

எனவே முத்துநகர் மக்கள் எதிர்கொண்டுள்ள இந்த பிரச்னைக்கு அரசாங்கம் நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களை வீதிக்கு இறக்கவிடமாட்டோம் என தெரிவித்த இந்த அரசாங்கம், அந்த மக்களுக்கு தற்போது நியாயமான தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்”- என்றார். (எ)

வடிகான் மூடி திருட்டு:

# நகரசபை உறுப்பினர் உட்பட மூவருக்கு பிணை கிடைத்தது

மட்டக்களப்பு, ஜூலை 25

மட்டக்களப்பு, காத்தான்குடியில் நகர சபைக்கு சொந்தமான வடிகான் கொங்கிரீற் மூடியை திருடச் சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நகர சபை சுயேச்சைக்குழு உறுப்பினர் ஒருவர் உட்பட 3 பேரையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் புதன்கிழமை இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான தலா இரண்டு பேர் கொண்ட ஆட்பிணையில் செல்ல உத்தர விட்டு எதிர்வரும் செப்ரெம்பர் 23ஆம் திகதி வழக்கை தவணையிட்டு ஒத்திவைத்தார்.

# உகந்தைமலை முருகன் ஆலய ஆடிவேல் விழா மஹோற்சவம்

காரைதீவு, ஜூலை 25

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது என்று ஆலய வண்ணக்கர் சுதுநிலமே திஸ நாயக்க சுதா தெரிவித்தார்.

தொடர்ந்து 15 நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 09ஆம் திகதி சமுத்திரத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறும்.

உற்சவ காலங்களில் போக்குவரத்து மற்றும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-08)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம், வெறித்தனத்தில் மூழ்கிய ஒரு நாடு பாகிஸ்தான்!

## ஐ.நா. அவையில் இந்தியா குற்றச்சாட்டு

ஜெனிவா, ஜூலை 25

**வெறித்தனத்திலும் பயங்கரவாதத்திலும் மூழ்கியுள்ள ஒரு நாடு பாகிஸ்தான் என்றும் அந்த நாடு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து தொடர்ந்து கடன் வாங்கும் நாடு என்றும் ஐ.நா பாதுகாப்பு அவை கூட்டத்தில் இந்தியா குற்றஞ் சாட்டியது.**




15 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு அவையின் தற்போதைய தலைவராக பாகிஸ்தான் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஐ.நா. பாதுகாப்பு அவையில் நடைபெற்ற, "சர்ச்சைகளை அமைதியான முறையில் தீர்த்து வைப்பதன் மூலம் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை ஊக்குவித்தல்" எனும் தலைப்பில் நடைபெற்ற திறந்தவெளி கருத்தரங்கில், கூட்டத்துக்கு தலைமை வகித்து பாகிஸ்தான் துணைப் பிரதமர் இஷாக் தர் பேசினார்.

அப்போது அவர், ஜம்மு காஷ்மீர் குறித்தும், சிந்து நதி நீரை இந்தியா நிறுத்தியது குறித்தும் பேசினார். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் பேசிய ஐ.நாவுக்கான இந்திய நிரந்தரத் தூதுவர் பர்வதநேனி ஹறிஷ், "நாம் தற்போது சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்து பேசுகிறோம். இதற்கு அனைவரும் ஏற்கத்தக்க, அங்கீகரிக்கத்தக்க அடிப்படை விதிகள் தேவை. சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு பயங்கரவாதத்துக்கு எதிரான பூஜ்ஜிய சகிப்புத்தன்மை கொள்கை மிகவும் முக்கியம்.

இந்தியா என்றால், முன்னேற்றம், செழிப்பு, வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு நாடு என்ற செய்தியை உலகம் பெற்றிருக்கிறது. ஒரு முதிர்ந்த ஜனநாயகமாகவும் வளர்ந்து வரும் பொருளாதாரமாகவும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை வழங்கும் ஒரு நாடாகவும் இந்தியா தன்னை முன்னிறுத்துகிறது. மறுபுறம் இதற்கு நேர்மாறான தோற்றத்தை பாகிஸ்தான் கொண்டிருக்கிறது. வெறித்தனம், பயங்கரவாதம் ஆகியவற்றில் மூழ்கியுள்ள ஒரு நாடு பாகிஸ்தான். சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து தொடர்ந்து கடன் வாங்கும் நாடு அது. சமீபத்தில் சுமார் ஒரு பில்லியன் டொலர் கடன் வழங்க சர்வதேச நாணய நிதியம் ஒப்புக்கொண்டுள்ளது. இதன்மூலம், இதுவரை சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பாகிஸ்தான் பெற்றுள்ள கடன் தொகை 2. 1 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்ற தி ரெசிஸ்டன்ஸ் பிரண்ட் அமைப்பு, பாகிஸ்தானை தளமாகக் கொண்ட லஷ்கர் இ தொய்பாவின் முன்னணி அமைப்பு. எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை வளர்க்கும் நாடாகவும், சர்வதேச உறவுகளை மதிக்காத நாடாகவும் பாகிஸ்தான் உள்ளது. அதற்கான கடுமையான விலை அதற்கு விதிக்கப்பட வேண்டும்"- என்றார். (எ)

# பிரம்மபுத்திரா நதியில் கட்டப்படும் புதிய அணையால் பாதிப்பில்லை

## இந்தியாவுக்கு சீனா பதில்

பீஜிங், ஜூலை 25

பிரம்மபுத்திரா நதியில் கட்டப்படும் புதிய அணையால் இந்தியாவுக்கு பாதிப்பில்லை என்று சீனா தெரிவித்துள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய அணையை பிரம்மபுத்திரா நதியின் குறுக்கே இலங்கை மதிப்பில் 48. 74 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பில் சீனா கட்டத்தொடங்கியுள்ளது. யார்லங் ஸாங்போ என்ற பெயரில் (பிரம்மபுத்திரா) திபெத் பிராந்தியத்தில் ஓடும் இந்த நதியின் குறுக்கே அணை கட்டுவதற்கான தொடக்க விழா கடந்த ஜூலை 19ஆம் திகதி சீனப் பிரதமர் லீ கியாங் தலைமையில் நடைபெற்றது.

பிரம்மபுத்திரா நதி சீனாவில் உற்பத்தியானாலும் இந்தியா வழியாக கடந்து பங்களாதேஷுக்கு சென்று கடலில் கடக்கிறது. சீனா அணை கட்டி அதைத் தடுக்கும் பட்சத்தில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் பகுதிகள் கடுமையாக பாதிக்கப்படும். இந்த புதிய அணைக்கு மொடுடோ நீர்மின் நிலையம் என சீனா பெயர் சூட்டியுள்ளது. இந்த அணை கட்டப்பட்டுவிட்டால், உலகின் மிகப் பெரிய அணை என்ற சாதனை நிகழ்த்தப்படும். அதே நேரத்தில் பிரம்மபுத்திரா நதியின் நீரோட்டம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. இதனால், இந்தியாவும் பங்களாதேஷும் அணை கட்டுவதற்கு ஆட்சேபம் தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில், புதிய அணை விவகாரம் குறித்து சீன வெளிவிவகார அமைச்சக செய்தி தொடர்பாளர் குவோ ஜியாகுன் கூறியதாவது: "அணை கட்டப்படுவதால், பிரம்மபுத்திரா நதி பாய்ந்தோடும் நாடுகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது. மாறாக பிரம்மபுத்திரா நதியில் ஏற்படும் அளவுக்கு அதிகமான வெள்ளப்பெருக்கு தடுக்கப்படும். இதனால், இயற்கை பேரிடர் நிகழ்வது குறையும். அணை கட்டும் திட்டம் தொடர்பில் இந்தியா மற்றும் பங்களாதேஷிடம் உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. பிரம்மபுத்திரா பாய்ந்தோடும் நாடுகளின் நலனிலும் சீனா அக்கறை கொண்டுள்ளது. அணை கட்டுமான திட்டத்தால் ஏற்படும் நன்மை நிச்சயம் இந்தியா மற்றும் பங்களாதேஷுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். அணை கட்டுவது என்பது சீனாவின் இறையாண்மைக்கு உட்பட்டது"- என்று தெரிவித்தார். (எ)

# பாகிஸ்தானில் பேரிடர் 234 பேர் உயிரிழந்தனர்

இஸ்லாமாபாத், ஜூலை 25

பாகிஸ்தானில் கனமழை - வெள்ளத்தால் இதுவரை 234 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் பருவமழை தீவிரமடைந்து, கனமழை பெய்து வருகின்றது. இதனால், அங்குள்ள நீர்நிலைகள் பெருமளவில் நிரம்பி பல்வேறு இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதில், பஞ்சாப் மாகாணம் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, அந்த நாட்டில் வெள்ளத்தால் பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் சூழலில், கடந்த ஜூன் மாதத்தின் இறுதியிலிருந்து சுமார் 234 பேர் பலியானதாக, பாகிஸ்தான் பேரிடர் மேலாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

செனாப், சிந்து மற்றும் ஜெலும் ஆகிய நதிகளின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால், முசாபர்நகர், டேரா காஸி கான், ரஹிம் யர் கான், ஜாங் மற்றும் நான்கானா சாஹிப் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்களது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கனமழையால் பாகிஸ்தானின் பெரும்பாலான ஆறுகள், ஏரிகள் உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்பியுள்ளதால், கைபர் பக்துன்குவா, கில்கிட் பல்டிஸ்தான் ஆகிய மாகாணங்களிலும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. (எ)

# முன்னாள் பிரதமர் இம்ரான்கான் ஆதரவாளர்கள் 40 பேருக்கு சிறை

இஸ்லாமாபாத், ஜூலை 25

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் ஆதரவாளர்கள் 40 பேருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பரிசு பொருட்களை வாங்கிக் குவித்த "தோஷ் கானா" வழக்கில் இம்ரான்கான் கைது செய்யப்பட்டு அபோட் சிறையில் கடந்த 2022ஆம் ஆண்டு அடைக்கப்பட்டார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இம்ரான்கான் ஆதரவாளர்கள் நாடு தழுவிய போராட்டத்தில் 2023ஆம் ஆண்டு ஈடுபட்டனர்.

தலைநகர் இஸ்லாமாபாத் உள்ளிட்ட நகரங்களில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் பல கோடிக்கணக்கான பொதுச் சொத்துகள் தீவைத்து எரிக்கப்பட்டன. 10இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இது தொடர்பில் இஸ்லாமாபாத் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்த வழக்கு தொடர்பில் இம்ரான்கானின் கட்சியான தெரிக்-இ-பாகிஸ்தான் கட்சியின் முக்கிய தலைவர்கள் உட்பட ஆதரவாளர்கள் 40 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு 10 தலா ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (எ)

# பிரதமர் மோடிக்கு லண்டனில் இந்தியர்கள் உற்சாக வரவேற்பு

லண்டன், ஜூலை 25



இரண்டு நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை நேற்று முன்தினம் புதன்கிழமை தொடங்கிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, லண்டன் சென்றடைந்தார். அங்கு வசித்து வரும் இந்திய மக்கள், வம்சாவளியினர் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இங்கிலாந்து, மாலைதீவு ஆகிய 2 நாடுகளுக்கு பிரதமர் மோடி பயணம் மேற்கொண்டுள்ளார். இந்த பயணத்தின் போது இந்தியாவுக்கும் அந்த நாடுகளுக்கும் இடையே பல்வேறு புதிய ஒப்பந்தங்கள் இறுதியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பயணத்தில் முதலாவதாக பிரதமர் மோடி இங்கிலாந்து சென்றடைந்தார். அங்கு 2 நாட்கள் தங்கியிருக்கும் மோடி, இங்கிலாந்து பிரதமர் கியர் ஸ்டார்மரை சந்தித்து பேச்சுகள் நடத்துகிறார். இதைத் தொடர்ந்து இங்கிலாந்து மன்னர் 3ஆம் சார்லஸையும் மோடி சந்திக்கிறார்.

இங்கிலாந்து பயணம் முடிந்ததும், இன்று 25, நாளை 26ஆம் திகதிகளில் மாலைதீவுக்கு பிரதமர் மோடி பயணம் மேற்கொள்ளவுள்ளார். மாலைதீவின் சுதந்திர தின கொண்டாட்டங்களில் பிரதமர் மோடி கலந்து கொள்கிறார். இந்த பயணத்தின்போது மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சுவை சந்தித்து விரிவான பேச்சுகள் நடத்தவுள்ளார்.

இலங்கை நேரப்படி நேற்று வியாழக்கிமை அதிகாலை பிரதமர் மோடி லண்டன் சென்றடைந்தார். அவரை இங்கிலாந்து மற்றும் இந்திய பிரதிநிதிகள் வரவேற்றனர். விமான நிலையத்துக்கு வெளியே இங்கிலாந்தில் வசித்து வரும் இந்திய மக்கள், மாணவர்கள் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

"லண்டனில் தரையிறங்கினேன். இந்தப் பயணம் இரு நாடுகளுக்கு இடையிலான பொருளாதார கூட்டாண்மையை மேம்படுத்தி நெடுந்தூரம் இட்டுச் செல்லும் என நம்புகிறேன். மக்களுக்கான வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும். உலகளாவிய முன்னேற்றத்துக்கு இந்தியா மற்றும் இங்கிலாந்து இடையே வலுவான நட்புறவு அவசியம்" என பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் பதிவு செய்துள்ளார். இங்கிலாந்தில் உள்ள இந்திய மக்களின் அன்பான வரவேற்பால் நெகிழ்ச்சியடைந்ததாகவும் பிரதமர் மோடி தெரிவித்தார். (எ)

# கொளுத்தும் வெயிலால் சீனாவில் மக்கள் தவிப்பு

பீஜிங், ஜூலை 25

சீனாவில் கொளுத்தும் வெயிலால் வெப்பத்தை சமாளிக்க முடியாமல் மக்கள் தவித்து வருகின்றனர்.

சீனாவில் கோடைக்காலம் தொடர்ந்து நீடித்து வருகிறது. தலைநகர் பீஜிங் உள்ளிட்ட நகரங்களில் வெயில் கொளுத்தி வருகிறது. இதனால் பொதுமக்கள், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வெயிலில் தவித்து வருகின்றனர்.

குறிப்பாக சீனாவின் ஷாங்காய் மாகாணத்தில் வெயில் 95 டிகிரிவரை நீடித்து வருகிறது. இதனால் அங்குள்ள உள்ளூர் மக்கள் தலையில் குளிர்ந்த பசை போன்ற திரவத்தை வெள்ளை துணியில் தடவி நெற்றியில் ஒட்டிக் கொண்டு அலைவதை காண முடிகிறது.

சீனாவில் கடும் வெயில் காரணமாக மின்சார பயன்பாடு "கிடுகிடு"வென உயர்ந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகளிர் ஒருநாள் கிரிக்கெட்:

# இங்கிலாந்து அணியை வீழ்த்தி தொடரை கைப்பற்றிய இந்தியா

லண்டன், ஜூலை 25

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி இந்திய அணி தொடரை கைப்பற்றியது.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடியது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 3 - 2 என்ற கணக்கில் கைப்பற்றிய இந்திய அணி, அடுத்ததாக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதன் முதலாவது ஆட்டத்தில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்தியாவும் 2ஆவது ஆட்டத்தில் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தும் வெற்றி பெற்றன. இதனால் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகளில் தொடர் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் 3ஆவது மற்றும் கடைசி போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பாட்டம் செய்த இந்தியா 50 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டும் இழந்து 318 ஓட்டங்கள் குவித்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஹர்மன்பிரீத் கவுர் 102 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து 319 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய இங்கிலாந்து 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 305 ஓட்டங்களுக்கு




சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக நாட் ஸ்கிவர் பிரண்ட் 98 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்தியா தரப்பில் கிராந்தி கவுட் 6 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது. (எ)

## 4 ஆயிரம் ஓட்டங்களை கடந்து ஹர்மன்பிரீத் கவுர் சாதனை

லண்டன், ஜூலை 25

மகளிர் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 4 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து ஹர்மன்பிரீத் கவுர் சாதனை படைத்துள்ளார்.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடியது.

இதில், 3ஆவது ஒருநாள் போட்டியில் இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஹர்மன்பிரீத் கவுர் 102 ஓட்டங்கள் எடுத்தார்.

முன்னதாக ஹர்மன்பிரீத் கவுர் 34 ஓட்டங்கள் எடுத்த போது, சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 4 ஆயிரம் ஓட்டங்களை (149ஆவது ஆட்டம்) கடந்த 17ஆவது வீராங்கனை என்ற சிறப்பை பெற்றார். இந்திய அளவில் மிதாலிராஜ், மந்தனா ஆகியோருக்கு பிறகு இந்த மைல்கல்லை எட்டியவர் ஹர்மன்பிரீத் கவுர் தான் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)




## வாஷிங்டன் ஓபன் ரென்னிஸ்: பென் ஷெல்டன் முன்னேற்றம்

வாஷிங்டன், ஜூலை 25

வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடரில் பென் ஷெல்டன் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள வாஷிங்டன் ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் அமெரிக்காவின் முன்னணி வீரரான பென் ஷெல்டன் சக நாட்டு வீரரான மெக்கன்சி மெக்டொனால்ட் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய பென் ஷெல்டன் 6-3, 6-4 என்ற நேர் செற் கணக்கில் மெக்கன்சி மெக்டொனால்டை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)



## 4 விக்கெட் இழப்புக்கு இந்தியா 264 ஓட்டங்கள்




மான்செஸ்டர், ஜூலை 25

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 83 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 264 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்தப் போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பாட்டம் செய்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய கே.எல்.ராகுல் - ஜெய்ஸ்வால் ஜோடி அணிக்கு சிறப்பான தொடக்கம் அமைத்தது. இந்த ஜோடி 94 ஓட்டங்களில் பிரிந்தது. ராகுல் 46 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

சிறப்பாக விளையாடிய ஜெய்ஸ்வால் அரைச்சதம் கடந்த நிலையில் 56 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சுப்மன் கில் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தமிழக வீரரான சாய் சுதர்சன், தனக்கு கிடைத்த வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்தி அரைச்சதம் அடித்தார். அவர் 61 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ரிஷப் பண்ட் 37 ஓட்டங்களில் இருந்தபோது அவரது காலில் காயம் ஏற்பட்டதால், பாதியிலேயே வெளியேறினார். முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 83 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 264 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஜடேஜாவும், ஷர்துல் தாக்கூரும் தலா 19 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர். (எ)

## பி. வி. சிந்து வெற்றி



சாங்சோவ், ஜூலை 25

சீனாவின் சாங்சோவ் நகரில் சீனா ஓபின் பட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் ஒலிம்பிக்கில் 2 முறை பதக்கம் வென்ற இந்தியாவின் பி.வி. சிந்து, உலகத் தரவரிசையில் 6ஆவது இடத்தில் உள்ள ஜப்பானின் டோமோகா மியாசாகியுடன் மோதினார். 62 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் உலகத் தரவரிசையில் 15ஆவது இடத்தில் உள்ள பி. வி. சிந்து 21-15, 8-21, 21-17 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

ஹைதராபாத்தைச் சேர்ந்த 30 வயதான சிந்து, காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சகநாட்டைச் சேர்ந்த உன்னதி ஹூடாவுடன் மோதுகிறார். உன்னதி ஹூடா முதல் சுற்றில் 21-11, 21-16 என்ற செற் கணக்கில் ஸ்கொட்லாந்தின் கிறிஸ்டி கில்மோரை வீழ்த்தினார். ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் உலகத் தரவரிசையில் 15ஆவது இடத்தில் உள்ள இந்தியாவின் சாட்விக் சாய்ராஜ் ராங்கிரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடி 21-13, 21-9 என்ற நேர் செற் கணக்கில் ஜப்பானின் கென்யா மிட்சுஹாஷி, ஹிரோகி ஒகாமுரா ஜோடியை தோற்கடித்தது. காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சாட்விக், ஷிராக் ஜோடி தரவரிசையில் 8ஆவது இடத்தில் உள்ள இந்தோனேஷியாவின் லியோ ரோலி கார்னாண்டோ, பகாஸ் மவுலானா ஜோடியை எதிர்கொள்கிறது. (எ)

## 8 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸி. அணி அபார வெற்றி

ஜமைக்கா, ஜூலை 25

8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி அபார வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலையில் இருந்தது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி ஜமைக்காவில் நேற்று நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பாட்டம் செய்த மேற்கு இந்திய தீவுகள் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 172 ஓட்டங்கள் எடுத்தது. மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக பிரண்டன் கிங் 51 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலியா தரப்பில் அடம் ஸம்பா 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 173 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய அவுஸ்திரேலியா 15.2 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 173 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அவுஸ்திரேலியா தரப்பில் அதிரடியாக ஆடிய ஜோஷ் இங்கிலிஸ் 78 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ரி



- 20 தொடரில் 2-0 என அவுஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது ரி - 20 போட்டி இன்று 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி 09 மின்சாரம் தடைப்பட்டமை குறித்து சாட்சி விசாரணைகளை முன்னெடுக்க தீர்மானம்

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

ශ්‍රී ලංකා මහජන උපයෝගිතා කොමිෂන් සභාව
இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
**Public Utilities Commission of Sri Lanka**
PUCSL

கொழும்பு, ஜூலை 25

கடந்த பெப்ரவரி மாதம் 09ஆம் திகதி நாடு முழுவதும் மின்விநியோகம் தடைப்பட்டமை குறித்து சாட்சி விசாரணைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இலங்கை மின்சார சபை முன்னெடுத்த விசாரணைகளின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இந்த சாட்சி விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக ஆணைக்குழுவின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்துக்களை முன்வைக்க விரும்புவோர் 0772 94 31 93 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கிக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## தாவடி...

குத்திவிட்டு தப்பிச் சென்றார்.

படுகாயங்களுடன் மீட்கப்பட்ட நபர் யாழ். போதனா மருத்துவமனை யில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந் தார். மானிப்பாயைச் சேர்ந்த நே. சர்வேந்திரன் (வயது 45) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் சந்தேக நபரை மண்டைதீவு பகுதியில் வைத்து நேற்று கைது செய்தனர். அத்து டன், அவரிடம் விசாரணைகள் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

(முன்னர் வந்த செய்தி பக்கம் 2இல்)

## தாயும்...

இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டவர்கள் உசாகரன் மாலினி (வயது38) அவரின் மகள்களான உ. மிக்சா (வயது11), உ. சதுசா (வயது 04) என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தாயும் பிள்ளைகளும் பனிக்கன் குளத்தை சேர்ந்தவர்களாவர். சடலங்கள் மீட்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவிலேயே அவர்கள் வசித்து வந்திருந்தனர்.

இந்த நிலையில், நேற்று காலை கிணற்றின் அருகே பெண்ணின் கைப்பையும் பொருட்கள் சிலவும் காணப்பட்டன. இது தொடர்பில் ஊரவர்கள் கிராம அலுவலர், பொலிஸாருக்கு தகவல் வழங்கினர். அங்கு வந்த பொலிஸார் நடத்திய தேடுதலில் கிணற்றில் மூவரின் சடலங்களும் கண்டுபிடிக்கப் பட்டன.

முல்லைத்தீவு நீதிவான் சம்பவ இடத்தைப் பார்வையிட்ட பின்னர் அவரின் உத்தரவில் சடலங்கள் மீட்கப்பட்டு, உடற்கூராய்வு பரிசோதனைக்காக முல்லைத்தீவு மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டன.

இவர்களின் உயிரிழப்புக்கான காரணம் உடனடியாக தெரிய வரவில்லை. தவறான முடிவு எடுத்து உயிர் மாய்த்தனரா? அல்லது கொலை செய்யப்பட்டனரா என்ற கோணங்களில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## அரசியல்...

விவேகானந்தனூர் சதீஸ் தனது சிறைக் காலத்தில் எழுதிய "துருவேறும் கைவிலங்கு" எழுத்து ஆவணப்பேழை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து, சிறை உணவு பரிமாறலுடன் முதல்நாள் கவனவீர்ப்பு போராட்டம் நிறைவுபெற்றது.

இந்த கவனவீர்ப்பு நிகழ்வில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சமூக பிரதிநிதிகள், பெருமளவான பொது மக்கள் பங்கேற்றனர்.

இன்று வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாகவும் இந்த கவனவீர்ப்பு செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று ஏற்பாட்டு அமைப்பான குரலற்றவர்களின் குரல் அமைப்பு அறிவித்துள்ளது. (ஐ)

(மேலும் படங்கள் பக்கம் 2இல்)

## கறுப்பு...

கறுப்பு ஜூலை வன்முறை சம்பவங்களின்போது, தமி ழர்களின் உடைமைகளும் அபகரிக்கப்பட்டன. அந்த துயர சம்பவங்களை ஒரு விழாவாக மாற்றி கொண்டாட அரசாங்கம் முயல்கிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

## 3மனித...

பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டாம் கட்ட அகழ்வில் 19ஆவது நாளான நேற்றும் அகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, மேலும் 3 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. இதன்மூலம் இந்த மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 88ஆக அதிகரித்துள்ளது.

ஏற்கனவே, அடையாளம் காணப்பட்ட 67 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் 9 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. இதன் மூலம் அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 76ஆக அதிகரித்துள்ளது.

இந்த அகழ்வு பணிகள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ. ஏ. ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் தொல்லியல் பேராசிரியர் ராஜ்சோமதேவ, சட்ட மருத்துவ அதிகாரி செ. பிரணவன், யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறை விரிவுரையாளர்கள், தொல்லியல்துறை மாணவர்களின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலிகள்...

செய்யும் நோக்கில் ஆயுதம், வெடி பொருட்களை சேகரித்தனர் என்று இவர்கள்மீது குற்றஞ்சாட்டி சட்ட மா அதிபர் குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்திருந்தார்.

எனினும், பிரதிவாதிகளின் தரப்பு சட்டத்தரணிகளின் வாதங்களை ஏற்ற கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேஷ் வீரமன், 16 இளைஞர்களையும் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

சட்ட மா அதிபரின் குற்றப்பத்திரம் நடைமுறையில் இருந்தாலும் , நீதிமன்ற நியாயாதிக்க எல்லை என்ற அடிப்படையில், குறித்த 16 பேரும் யாழ்ப்பாண பிராந்தியத்தில் இடம்பெற்றவை என்று கூறப்படும் குற்றங்கள் தொடர்பிலேயே குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் வழக்கை விசாரிக்க முடியாது என்ற பிரதிவாதி தரப்பு சட்டத்தரணிகளின் வாதத்தை ஏற்ற நீதிபதி குறித்த 16 பேரையும் விடுதலை செய்தார். (ஐ)

## புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு...

கல்வி மிகவும் முக்கியமானது.

நம் நாட்டில் சிறையில் உள்ளவர்களில் சுமார் 80 வீதத்தினர் சாதாரண தர மட்டத்தை விடக் கீழ் மட்டத்தில் உள்ளனர். போதைக்கு அடிமையானவர்களில் சுமார் 70 வீதத்தினர் பேர் எட்டாம் வகுப்பை விட குறைவாக கற்றவர்களாக உள்ளனர். இதன்படி, சமூகக் குற்றங்களுக்கும் போதைப் பொருள் மற்றும் கல்விக்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது.

எமது பிள்ளைகள் பாடசாலைகளிலிருந்து இடை விலகி செல்வது முக்கிய சிக்கலாகும். 2019ஆம் ஆண்டு 16 ஆயிரத்து 673 மாணவர்கள் விலகினர். 2022இல் 20 ஆயிரத்து 759 பேர், 2024 ஆம் ஆண்டில் 20 ஆயிரத்து 755 பேர் இவ்வாறு விலகியுள்ளனர். அவர்கள் இன்னும் கற்க வேண்டியிருக்கும் நிலையில் பாடசாலையை விட்டு வெளியேறுகிறார்கள். இந்தப் பிள்ளைகளைப் பாதுகாக்க, 13 வருட கட்டாயக் கல்வியை வழங்குவதற்கு கல்வி சீர்திருத்தங்கள் தேவை. நமது பிள்ளைகள் பாடசாலை செல்வதைப் பாதியில் நிறுத்தக்கூடாது. எந்தப் பிள்ளைக்கும் அந்த நிலை ஏற்படக் கூடாது.

நமது கல்வி குறிப்பிடத்தக்க அளவுக்கு எமது பிள்ளைகளை இயந்திரமயமாக்கியுள்ளது. இன்று, கிராமங்களில் கரப்பந்தாட்ட மைதானம்கூட இல்லை. அறுவடை முடிந்ததும், வயல்களில் எல்லே விளையாடுவார்கள். கிராமத்தின் குளங்களில் நீந்துவார்கள். இன்றைய பிள்ளைகளிடையே இது போன்ற செயல்பாடுகள் காணப்படுவதில்லை. இயந்திரங்களை போல, ஈரம் இல்லாத, இரக்கம் இல்லாத, சமூகத்தின் மீதான பொறுப்பற்ற ஒரு தலைமுறை இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பிள்ளைகள் எமது காலத்திலிருந்தது போன்று இல்லை என்று சில நேரங்களில் பெற்றோர்கள் சொல்வதைக் கேட்கிறேன் - அது உண்மைதான். எமது காலத்தைப் போன்று, அதை விடச் சிறந்த பிள்ளைகள் இருக்க வேண்டும். ரியூஷன் அதிகாலை 4 மணிக்குத் தொடங்குகிறது. வகுப்புகள் முடிந்த பிறகுதான் அவர்கள் பாடசாலைக்கு செல்கிறார்கள். அந்தக் பிள்ளையின் வாழ்க்கை எப்படிப்பட்டது? பாடசாலைக்கு பிறகு அவர்கள் மீண்டும் வகுப்புக்கு செல்கிறார்கள். அந்தக் பிள்ளைக்கு ஒரு பிள்ளை பருவம் தேவை இல்லையா? ஒரு கவிதையையோ, பாடலையோ இரசிக்காத, ஒரு நாவலைப் படிக்காத, இலக்கியத்தால் வளர்க்கப்படாத, எந்த சமூக செயல்பாடும் இல்லாத இயந்திரங்களை போன்ற பிள்ளைகளை நாம் வளர்க்க விரும்புகிறோமா? இது போன்ற ஒரு நாடு முன்னோக்கிச் செல்ல முடியாது. பிள்ளையின் மீது சுமத்தப்பட்டுள்ள கல்விச் சுமையைக் குறைக்க வேண்டும், அது நமது பொறுப்பு.

தொழில் பயிற்சி நிலையம் பல்கலைக்கழகப் பட்டம் பெற முடியாதவர்களுக்கான இடம் அல்ல. தொழில் பயிற்சி என்பது தெரிவுக் கல்வி அல்ல. 2033ஆம் ஆண்டுக்குள் அறிவு மற்றும் தொழில் நுட்பத்துடன்கூடிய 40 நவீன தொழில் பயிற்சி மையங்களை உருவாக்க திட்டமிட்டுள்ளோம். ஒரு மாவட்டத்துக்கு இரண்டு அமைக்கப்படும். 13 வருட கல்விக்குப் பிறகு, பிள்ளைக்கு திறந்த தொழில் கல்விக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

பாடங்களை அரசியல்வாதிகள் தேர்வு செய்யக்கூடாது. அது கல்வி சீர்திருத்தத்திற்குத் தேவையான நிபுணர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின்படி செய்யப்படும் ஒன்று. பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் சீர்திருத்தத்தை கல்வி நிபுணர்களிடம் நாம் ஒப்படைத்துள்ளோம். அரசியல் அதிகாரம் காலக்கெடுவையே நிர்ணயிக்க வேண்டும். வெற்றிகரமான கட்டமைப்பு மாற்றத்தை அடைய அரசியல் அதிகாரம் உள்ளது.

கல்வியில் என்ன மாதிரியான கட்டமைப்பு மாற்றம் தேவை என்பதை நாங்கள் விவாதிப்போம். அது குறித்த உள்ளடக்கம், பாடங்களுக்கான காலம் தொடர்பில் நாம் கவனத்தில் கொள்ளலாம். நாம் ஒவ்வொரு துறையிலும் நிபுணர்கள் அல்ல. எனவே, நாம் அனைத்து தரப்புகளையும் ஒன்றிணைத்து இந்தப் பயணத்தில் ஈடுபட வேண்டும். நாட்டின் பொருளாதார அமைப்பின் வலுவான இருப்புக்கு இந்தக் கல்வி சீர்திருத்த செயல்முறை மிகவும் முக்கியமானது. எனவே, இந்தப் பணியை மேற்கொள்வதில் அனைத்து அரசியல் குழுக்களும் கைகோக்க வேண்டும் - என்றார். (ஐ)

## நானும்...

அரசியல் கைதியான எனது மகன் தொடர்பான வழக்கு நடக்கிறது. பெரும் கஷ்டத்தின் மத்தியில் எனது பேரப்பிள்ளைகளை (ஆனந்தசுதாகரனின் பிள்ளைகள்) படிப்பித்து, வளர்த்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு வயதாகி விட்டது. வருத்தங்களும் உள்ளன. எனது பேரப் பிள்ளைகளுக்கு எந்த உதவியும் வேண்டாம். அப்பாவின் ஆதரவு தான் வேண்டும்.

எனக்கு இருப்பது ஒரேயொரு மகன்தான். அவரைவிட்டால் வேறு பிள்ளைகளும் இல்லை. ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யவேண்டும் என்று கோரியே இங்கு வந்துள்ளேன். நானும் இறந்தால் இரு பிள்ளைகளும் அநாதைகளாகி விடுவார்கள்.

மகசின் சிறையிலிருந்த ஆனந்தசுதாகரன் போகம்பரை சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார். அங்கு கடும்மன அழுத்ததில் சிக்குண்டவர்போல காணப்படுகிறார். பார்ப்பதற்கு மிகவும் கவலையாக உள்ளது. அவர் தனக்கு உடல்நிலை சரியில்லை என்று கடந்த 19ஆம் திகதி நான் பார்த்தபோது கூறினார்.

எனக்கு யாரிடம் கூறுவது என்று தெரியவில்லை. மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்தேன். அவர்கள், தற்போதுதானே வழக்கு முடிந்தது. அடிக்கடி போய் வராதீர்கள் - உங்களுக்கு தூரம் என்றார்கள். தூரம் என்பதற்காக என்னால் விட்டுவிட்டு இருக்க முடியாது, மனக்குழப்பமாக உள்ளது பிள்ளைகள் இருவரும் அம்மாவும் அப்பாவும் இல்லாத நிலையில் இருக்கிறார்கள் - என்றார். (ஐ)

## 100கோடி...

தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

மேலும், இழப்பீட்டு தொகையை சிங்கப்பூரை தளமாகக் கொண்ட கப் பல் நிறுவனம் தவணைகளாக செலுத்த முடியும் என்றும் இழப்பீட்டு தொகையின் முதல் கட் டணத்தை செப்ரெம்பர் 23 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் எனவும் உயர்நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த, 2021 மே 20 ஆம் திகதி கொழும்புக்கு அருகே வந்த எக்ஸ்-பிரஸ் பேர்ள் சரக்குக் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டது. கப்பலில் இருந்த இரசாயனங்கள் மற்றும் கொள் கலன்கள் தீயில் கருகின. தீயை அணைக்க பல நாட்கள் போராடியும் கப் பல் முழுமையாக மூழ்கியது.


இதையடுத்து, நாட் டின் கடற்பரப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற் பட்டது. கோடிக்கணக் கான பிளாஸ்ரிக் துகள்கள் மற்றும் நச்சு இரசா யன பொருட்கள் கரை யொதுங்கியதால் கரை யோர பகுதிகள் பெரும் சுற்றுச்சூழல் அழிவுக்கு முகங்கொடுத்தது. இந்தப் பொருட்களால் கடல் வாழ் உயிரினங்கள் பல உயிரிழந்தன. மேலும், மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல முடியாமல் பல நாட்களாக தொழி லின்றி தவித்தனர். இதனால் அவர்களின் வாழ்வாததாரம் பாதிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கறுப்பு ஜூலை இலங்கையின் ஒரு சோகமான அத்தியாயம்!

## கனடா பிரதமர் சுட்டிக்காட்டு



ஒட்டாவா, ஜூலை 25

**கறுப்பு ஜூலையானது இலங்கையின் வரலாற்றில் ஒரு சோகமான அத்தியாயமாகவே உள்ளது என்று கனடாவின் பிரதமர் மார்க் கார்னி தெரிவித்தார்.**

கறுப்பு ஜூலையை குறிக்கும் விதத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

"நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான ஒரு இனப்படுகொலை வெடித்தது. ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

எண்ணற்றோர் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இலங்கை வரலாற்றில் கறுப்பு ஜூலை ஒரு சோகமான அத்தியாயமாகவே உள்ளது."-எனவும் மேற்படி அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக் கனடியர்களின் ஆதரவால் உந்தப்பட்டு 1983 ஆம் ஆண்டு துன்புறுத்தலில் இருந்து தப்பி ஓடும் 1800 க்கும் மேற்பட்ட தமிழர்களை வரவேற்க கனடா ஒரு சிறப்பு நடவடிக்கை திட்டத்தை செயல்படுத்தியது.

மேலும் 2022 ஆம் ஆண்டில் கனடா பாராளுமன்றம் மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக ஒருமனதாக அறிவித்தது. இது உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நீடித்த அர்ப்பணிப்பாகும்.

இந்தக் கொடுமைகளில் பாதிக்கப்பட்டவர்களையும் உயிர் பிழைத்தவர்களையும் நினைவு கூர்வதில் கனடா, தமிழ்-கனடியர்களுடன் நிற்கிறது." - எனவும் கனடா பிரதமர் அறிக்கை ஊடாக குறிப்பிட்டார்.

## கறுப்பு ஜூலையின் வலிகள் மீண்டும் எதிரொலிக்கின்றன

### கனடா எதிர்க்கட்சித் தலைவர்

ஒட்டாவா, ஜூலை 25

தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலை குறித்த புதிய ஆதாரங்கள் வெளியா கியுள்ள நிலையில் கறுப்பு ஜூலையின் வலிகள் மீண்டும் எதிரொலிக்கின்றன என கனடாவின் கென்சவேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லியர் தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலையை குறிக்கும் வகையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தமிழ் பாரம்பரியத்தை கொண்ட கனேடியர்கள் கறுப்பு ஜூலையை நினைவு கூருவதற்கு தயாராகும் இவ்வேளையில் நாங்கள் மீண்டுமொரு முறை இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறையின் ஈவிரக்கமற்ற பாரம்பரியத்தை எதிர்கொண்டுள்ளோம்.

இலங்கையில் செம்மணி மனித புதைகுழி அகழ்வுகள் ஆரம்பமாகி இந்த வாரத்துடன் ஒரு வாரமாகின்றது. இந்த மனித புதைகுழியிலிருந்து கைக்குழந்தைகள் என கருதப்படும் உடல்கள் உட்பட தமிழர்களின் பெருமளவு உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் உயிர்கள் கௌவரத்திற்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலை குறித்த புதிய ஆதாரங்கள் வெளியாகியுள்ள நிலையில் கறுப்பு ஜூலையின் வலிகள் மீண்டும் எதிரொலிக்கின்றன.

வழமையான கட்டுமானப் பணியாக ஆரம்பித்தது - நடுங்கவைக்கும் கண்டுபிடிப்பாக மாறியது- தொழிலாளர்கள் நிலத்திற்கடியில் மனித உடல்களை கண்டுபிடித்தனர்.

நீதிமன்ற உத்தரவுகள் காரணமாக தற்போது ஆழமற்ற மனித புதைகுழிகளில் கண்கள் கட்டப்பட்டு கொலை செய்யப்பட்டவர்கள்,சிறுவர்கள் தனிப்பட்ட ரீதியில் எதிகொண்ட பாதிப்புகள் - விளையாட்டுப் பொருட்கள் , புத்தகப் பைகள்,ஆடைகள் தெரியவந்துள்ளன.

ஈவிரக்கமற்ற தன்மை ஆழம் காணமுடியாதது.தமிழ் கனேடியர்கள் தங்கள் இதயங்களில் பல தசாப்தங்களாக அறிந்திருந்த விடயங்களை - அதாவது இலங்கையின் உள்நாட்டு போரின்போது தங்களின் உறவுகள் காணா மல்போவது தற்செயலாக இடம் பெற்றது இல்லை என்பதை- செம்மணி மனித புதைகுழி நிரூபித்துள்ளது.

அவர்கள் கொண்டு செல்லப்பட்டார்கள் - மௌனமாக்கப்பட்டார்கள் - இரகசியமாக புதைக்கப்பட்டார்கள்.

உயிர்தப்பியவர்களுக்கு உறுதியான ஆதரவை வழங்கவேண்டிய , பாரிய அநீதிகள் எங்கு இடம்பெற்றாலும் நீதிக்கான தேடலில் உறுதியாகயிருக்கவேண்டிய தார்மீகப் பொறுப்பு கனடாவுக்குள்ளது.

மிக நீண்டகாலமாக இந்த சுமையை சுமக்கும் இங்குள்ள மற்றும் உலகெங்கிலும் உள்ள தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கவேண்டிய பொறுப்பும் உள்ளது-என்றார். (அ)

## நாட்டில் 98 பாடசாலைகளில் ஒரு மாணவன்கூட இல்லை!

### சபையில் ஜனாதிபதி அநுர தகவல்



கொழும்பு, ஜூலை 25

20 மாணவர்களுக்கு குறைவான 406 பாடசாலை களும் 30 மாணவர்களுக்கு குறைவான 752 பாடசாலை களும் உள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

8 பாடசாலைகளில் ஒரு மாணவனும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றுக்கு நேற்று வருகை தந்த ஜனாதிபதி தனது விசேட உரையில் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

98 பாடசாலைகளில் ஒரு மாணவனும் இல்லை. 115 பாடசாலைகளில் 10 மாணவர்களுக்கு குறைவு,

20 மாணவர்களுக்கு குறைவான பாடசாலைகள் 406 உள்ளன. 30 மாணவர்களுக்கு குறைவான 752 பாடசாலைகளும் உள்ளன.

அத்துடன், 40 மாணவர்களுக்கு குறைவான உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 1141, 50 மாணவர்களுக்கு குறைவான பாடசாலைகளின் எண்ணிக்கை 1506 ஆகும்.

நாட்டின் மொத்த பாடசாலைகளின் 15 சதவீதமான பாடசாலைகளில் 50 மாணவர்களுக்கு குறைவாக உள்ளனர். 100 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகள் 3144 உள்ளன.

குச்சவெளியில் 2 மாணவர்களுக்கு 2 ஆசிரியர்களும், பண்டாரவளையில் 3 மாணவர்களுக்கு 3 ஆசிரியர்களும் திருகோணமலையில் 4 மாணவர்களுக்கு 4 ஆசிரியர்களும் உள்ளனர்.

சில பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை முழுமையாக மூட வேண்டும். சில பாடசாலைகளை இணைக்கவேண்டும். இன்னும் சில பிரதேசங்களில் புதிதாக பாடசாலைகளை உருவாக்கவேண்டும் -என்றார். (அ)

## வெலிகம பிரதேச சபை ஐக்கிய மக்கள் சக்தி வசம்

கொழும்பு, ஜூலை 25

வெலிகம பிரதேச சபையின் அதிகாரத்தையும் தவிசாளர் பதவியையும் ஐக்கிய மக்கள் சக்தி தம் வசப்படுத்தியது.

நேற்று சீதாவகபுர நகர சபையின் தவிசாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு நடைபெற்ற சந்தர்ப்பத்தில், பெரும்பான்மையை ஆதரவை பெற்று ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளாரான லசந்த விக்ரமசேகர தவிசாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். (அ)

## "சபாநாயகரை வாயை மூட சொன்னதற்கு மன்னியுங்கள்!"

### சபையில் கூறினார் ரோஹினி கவிரத்ன




கொழும்பு, ஜூலை 25

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவை வாயை மூடச் சொன்னதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன நேற்று மன்னிப்பு கேட்டார்.

"சபாநாயகர் அந்த நேரத்தில் நடந்து கொண்ட விதம் காரணமாக நான் ஆக்ரோஷமான வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனது ஒழுக்கம் எங்கே என்று சபாநாயகர் கேள்வி எழுப்பினார். மேலும் எனது மன்னிப்பு அந்தக் கேள்விக்கான பதில்" என்று கவிரத்ன கூறினார்.

சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க தனது சிறப்புரிமைகளை மீறியதாக பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

"நான் ஒரு கொலைகாரனின் மகள் என்று சபைத் தலைவர் கூறினார். என் தந்தை யாரையும் கொல்லவில்லை. ஆனால் மாத்தளை மாவட்ட மக்களுக்கு உயிர் கொடுத்தார்," என்று அவர் மேலும் கூறினார். (அ)

## 36,000 புற்றுநோயாளிகள் ஆறு மாதங்களில் அனுமதி



கொழும்பு, ஜூலை 25

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்குள், அதா வது 2025 ஜனவரி முதல் ஜூன் 30 வரை, மஹரகம அபேக்ஷா மருத்துவமனையில் 36,000 புற்றுநோயாளி கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார துணை அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

ஜனவரி 1 முதல் ஜூன் 30, 2025 வரை மருத்துவமனையில் 6,700 புதிய நோயாளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த்ராணி கிரியெல்லவின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், தினமும் சராசரியாக 950 முதல் 1,000 நோயாளிகள் கிளினிக்குகளுக்கு வருவதாகக் கூறினார். (அ)

## எனது படத்தை பிரசுரித்து இனவாதத்தை தூண்டும் ஆளும் கட்சி தமிழ் எம்.பிக்கள்!

### சபையில் ஹெக்டர் அப்புஹாமி வாக்குவாதம்

கொழும்பு, ஜூலை 25

எனது புகைப்படத்தை பிரசுரித்து இனவாதத்தை தூண்டும் வகையில் தேசியமக்கள் சக்தியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டுள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-கடந்த பாராளுமன்ற அமர்வில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் உரையாற்றுகையில், அவரின் தமிழ் மொழியைக் கேலி செய்து அவமதித்ததாகத் தெரிவித்து என்னுடைய புகைப்படத்தை சமூக ஊடகங்களில் பிரசுரித்து விமர்சித்துள்ளனர்.

அவர்களின் இவ்வாறான செயற்பாடு நாட்டில் இனங்களுக்கிடையில் பாரிய இனவாதத்தைத் தூண்டும்.

அதேவேளை, நாம் தமிழையும் தமிழ் மொழியையும் மதிக்கின்றோம்.

ஆகவே நாம் அவரின் மொழியை அவமதிக்கவில்லை- என்றார்.இதன்போது சபாநாயகர் அவர் பேசுவதை தடுத்து நிறுத்த முற்பட்டபோது, அவர் சபாநாயகருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org